Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 115 | திங்கட்கிழமை 21 மார்ச் 2022 | பங்குனி 07 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை: 30/=

## மாஸ்க் விலையும் உயர்கின்றது!

கொழும்பு, மார்ச் 21
சந்தையில் முகக்கவசங்களுக்கான விலை இன்று முதல் 30 சதவீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளதாக இலங்கை 14

## ஏறியது எரிவாயு விலை

கொழும்பு, மார்ச் 21
லாஃப்ஸ் சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. 12.5 கிலோகிராம் சிலிண்டரின் புதிய விலை 4 ஆயிரத்து 199 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

## மரக்கறிகள் விலை சரிவு

கொழும்பு, மார்ச் 21
தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் கடந்த வாரம் அதிகரித்துக் காணப்பட்ட மரக்கறிகளின் மொத்த விலை, நேற்றுக் காலை 15




மஹிந்தவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

# பேருந்து முற்றுகை முறியடிப்பு வயலூடாக முன்னேறிய மக்கள்!

## போராட்டக்காரர் மீது பொலிஸார் வெறியாட்டம்

**யாழ்ப்பாணம், மார்ச் 21**

**பிரதமர் மஹிந்தவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராடுவதற்காக முல்லைத்தீவிலிருந்து பேருந்தில் வந்தோரை, பேருந்துடன் சிறைப்படுத்துவதற்கு பொலிஸார் எடுத்த முற்றுகை முயற்சி நீண்ட நேரத்தின் பின்னர் முறியடிக்கப்பட்டது. அத்துடன் போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் மோசமான அடக்குமுறைகளைப் பிரயோகித்ததுடன், தலைமுடிகளைப் பிடித்து இழுத்து விழுத்திய சம்பவங்களும் நேற்றுப் பதிவாகின.** 15

*முச்சந்தி முரளி*



"என்னதான் நாட்டுக்கே பிரதம மந்திரியா இருந்தாலும் நினைச்ச இடத்துக்கு போகேலாத நிலைக்கு வந்திட்டினம் கண்டியளோ..!"



படம் - குமணன்

## பிரதமர் மஹிந்தவுக்கு கொடும்பாவி எரிப்பு

### 'நாங்கள் தமிழீழத் தாய்களடா!' எனவும் முழக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 21
பிரதமர் மஹிந்த ராஜபக்சவை வரவேற்கும் முகமாக கட்டப்பட்டு இருந்த பதாகைகளை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் பிடுங்கியெடுத்து 15

## மஹிந்தவுடன் கூடிக்குலாவிய அங்கஜன், டக்ளஸ் ஆதரவாளர்கள் மக்கள் போராட்டங்களை ஏறெடுத்தும் பார்க்கவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 21
பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் யாழ்ப்பாணத்துக்கான இரு நாள் பயணத்தின்போது, மக்கள் போராட்டங்களை, நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் 15

## மஹிந்த மீது வசை மாரி!

யாழ்ப்பாணம், மார்ச் 21
காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவுகள், மஹிந்த ராஜபக்சவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, போராட் 15

## தடம்புரண்டது பேருந்து ஒருவர் சாவு! 22பேர் காயம்;

முல்லைத்தீவு, மார்ச் 21
யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவு நோக்கிப் பயணித்த 14

## தண்ணீர்க் 'கானுக்குள்' வீழ்ந்த குழந்தை பரிதாபமாகச் சாவு!



முல்லைத்தீவு, மார்ச் 21
மலசலகூடத்துக்கு வைக்கப்பட்டிருந்த தண்ணீர்க்'கானுக்குள்' தவறி வீழ்ந்த ஒரு வயதும் மூன்று 15

## எரிபொருள் வரிசையில் நின்ற மற்றொரு முதியவரும் சாவு!!!

கொழும்பு, மார்ச் 21
மண்ணெண்ணெய் பெற்றுக் கொள்வதற்காக வரிசையில் நின்ற 70 வயதான முதியவர் ஒருவர் நேற்று 14

## போராட்டங்களால் ஓடி ஒளிந்த மஹிந்த

### நல்லூரைக் கைவிட்டு மாவிட்டபுரத்தில் வழிபாடு

யாழ்ப்பாணம், மார்ச் 21
பிரதமர் மஹிந்த ராஜபக்ச, நல்லூர்க் கந்த கைவிட்டு மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம் சென்று வழிபட்டுள்ளார். 15

## போருக்கு முன்னர் யாழில் சிங்கள முதலாளிகளாம்

### மட்டுவிலில் மஹிந்த தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 21
யாழ்ப்பாணத்தின் மூன்று யுகங்களை நான் கண்டிருக்கிறேன். 1970 ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணம் எப்படி 13

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




### இந்திய இழுவைப்படகுகளால் ஏற்பட்ட அழிவுகளுக்கு

# உலருணவுகள் போதாது வலைகளைத் தாருங்கள்

### கடற்றொழில் சம்மேளனத் தலைவர் யஸ்ரின் சொய்சா வலியுறுத்து

**மன்னார், மார்ச் 21**

**இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறலால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களுக்கு உலருணவை மட்டும் வழங்கினால் போதாது, அவர்கள் தொடர்ந்து தொழிலை முன்னெடுத்துச்செல்ல மீன்பிடி வலைகளை வழங்க வேண்டும் என்று மன்னார் மாவட்ட கடற்றொழில் சம்மேளனத் தலைவர் ஏ.யஸ்ரின் சொய்சா தெரிவித்தார்.**

இந்திய அரசால் மன்னார் மீனவர்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கிய நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய இழுவைப்படகு மீனவர்களால், எமது மீனவர்கள் மிகவும் சொல்லொணாத் துன்பங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். ஒவ்வொரு மீனவர்களும் குறைந்தது 5 லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியான மீன்பிடி உபகரணங்களை இழந்துள்ளனர். அதனால் உலர் உணவுப் பொருள்களுக்குப் பதிலாக மீன்பிடி வலைகளை வழங்கும் பட்சத்தில் அது மீனவர்களுக்கு பெரும் நன்மை பயக்கும்.

அதேவேளை மன்னார்த் தீவில் காற்றாலை பொருத்தப்பட்டுள்ளதால், எமது மீனவர்கள் பெரும் பாதிப்புக் களுக்கு உள்ளாகியுள்ளனர். ஆகவே கடற்றொழில் அமைச்சரும் இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகளும் ஆய்வுசெய்து எமது மீனவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். மன்னாருக்குக் கொண்டு வரப்படும் எந்தத் திட்டமாக இருந்தாலும் அவற்றை நன்கு பரிசீலனை செய்து நடைமுறைப்படுத்துவது சாலச் சிறந்தது -என்றார். (ம-4,60)



### யாழ். பல்கலையில்

## யாழ். தமிழ்ச்சங்கத்தின் முப்பெரும் நிகழ்வுகள்!

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் நடத்திய சங்கப்பேழை நூல்வெளியீடு, உலகத் தாய்மொழிநாள் பேருரை மற்றும் 2019 உயர்தரப் பரீட்சையில் தமிழ்ப்பாடத்தில் அதிவிசேட சித்தி பெற்ற வடமாகாண மாணவர்கள் 154 பேருக்கான மதிப்பளிப்பு ஆகிய மூன்று நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றன.

தமிழ்ச்சங்கப் பெருந்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராசா கலந்துகொண்டார்.

நிகழ்வில் வரவேற்புரையை யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத் தலைவர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசனும் தமிழ்மொழிநாள் பேருரையை கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவர் பேராசிரியர் சி.சந்திரசேகரமும் அவருக்கான அறிமுகவுரையை யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கப் பொருளாளர் பேராசிரியர் தி.வேல்நம்பியும் சங்கப்பேழை நூல் வெளியீட்டுரையை நூலின் பதிப்பாசிரியர் லோ.துசிகரனும் நூலாய்வுரையை பேராதனைப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் வ.மகேஸ்வரனும் ஆற்றினர். நன்றியுரையை சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினர் கு.பாலசண்முகனும் நிகழ்ச்சி முன்னிலைப்படுத்தலை சங்கச் செயலாளர் இ.சர்வேஸ்வராவும் மேற்கொண்டனர்.

சங்கப்பேழை நூலை தமிழ்ச்சங்கப் பெருந்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் வெளியிட்டு வைக்க, அதன் முதற்பிரதியை துணைவேந்தர் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராசா பெற்றுக்கொண்டார். நிகழ்வில் மாகாண மற்றும் வலயங்களின் தமிழ்ப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள் தமிழாசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ம)

## 5 ஆயிரம் ஹெக்ரேயரில் வவுனியாவில் சிறுபோகம்



வவுனியா, மார்ச் 21

வவுனியா மாவட்டத்தில் 5 ஆயிரத்து 885 ஹெக்ரேயரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுவரை 2 ஆயிரம் ஹெக்ரேயரில் சிறுபோகச் செய்யை மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், தற்போது அது அதிகரிக்கப்பட்டுள்ளது.

இரசாயன உரம் மற்றும் கிருமிநாசினி தடை செய்யப்பட்டதால் பெரும்போக நெற்செய்கையில் விவசாயிகள் நட்டத்தை எதிர்கொண்டிருந்தனர். தற்போது சேதனப்பசளையைப் பயன்படுத்திச் சிறுபோகச் செய்கையை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உரிய நேரத்தில் சேதனப் பசளைகள் கமநல சேவை நிலையங்கள் ஊடாக விவசாயிகளுக்கு வழங்கப்படும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது. அதேவேளை, கமநல சேவை நிலையங்களில் சேதனப் பசளையைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று விவசாயிகள் கூறுகின்றனர். (எ-110)

### காங்கேசன்துறை

## சிமெந்து தொழிற்சாலையை பார்வையிட்டார் மஹிந்த!

யாழ்ப்பாணம், மார்ச் 21

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையை பிரதமர் மஹிந்த ராஜபக்ச நேற்றுப் பார்வையிட்டார். 1950ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தொழிற்சாலை போர் காரணமாக 1990ஆம் ஆண்டு மூடப்பட்டது.

2021 பெப்ரவரி 8ஆம் திகதி அமைச்சரவை தீர்மானத்தின்படி காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையின் எஞ்சிய கட்டடங்களை எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டது.

இந்தநிலையில், நேற்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச அங்கு சென்று நிலைமைகளைப் பார்வையிட்டார். 80 வீதமான கட்டடங்களை சீரமைத்து பயன்படுத்த முடியும் என பிரதமரின் பயணத்தின்போது அறியமுடிந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனத்தின் தலைவர் காமினி ஏகநாயக்கவும் பிரதமருடன் சென்றிருந்தார். அதன்பின்னர் பிரதமர் மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்குச் சென்று வழிபாடுகளையும் மேற்கொண்டார். (எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு

# இழப்பீடுகள் வழங்குவது அரசின் வஞ்சகத்திட்டம்

### அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவிப்பு



**வவுனியா, மார்ச் 21**

**காணாமல் ஆக்கப்பட்டோருக்கான இறப்புச் சான்றிதழ் அல்லது காணாமற் போனமைக்கான சான்றிதழ் வழங்குவது பயங்கரவாதத்தின் மற்றொரு திட்டம் என்று தெரிவித்துள்ளார் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல்.**

நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போது நாட்டில் மக்கள் அடுத்த வேளை உணவுக்கே கையேந்தும் நிலை ஏற்பட்டுள்ளது. பொருளாதாரச் சிக்கலுக்கு முகம்கொடுத்து கொண்டிருக்கும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளைத் தனது நரி நாடகத்தில் சிக்க வைக்கும் முயற்சியாகவே ஒரு லட்சம் ரூபா கொடுப்பனவுத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் வறுமை நிலையைப் பயன்படுத்தி மரணச்சான்றிதழ் அல்லது காணாமற் போனதற்கான சான்றிதழைக் கொடுத்துப் போராட்டத்தைச் சிதைக்கவும் அமைப்புக்குள் கருத்து மோதலை உருவாக்கவும் ஆட்சியாளர்கள் காய் நகர்த்துகின்றனர்.

அரசு ஒடுக்குமுறை இயந்திரத்தினால் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அவர்கள் சார்ந்த குடும்பங்களுக்கு உயிருக்கு உயிரானவர்கள். தங்கள் உறவுகளைத் தேடியே நூற்றுக்கு அதிகமானோர் நோயில் விழுந்து மரணமடைந்திருக்கிறார்கள்.

இவையும் சாட்சியங்களை மறைக்கும் அல்லது இல்லாதொழிக்கும் அரசின் கொலை என்றே நாம் கருதுகின்றோம்.

அதைப்போன்றே அரச பயங்கரவாதத்தின் இன்னுமொரு திட்டமே காணாமற்போனோருக்கான மரணச் சான்றிதழ் அல்லது காணாமற் போனமைக்கான சான்றிதழ் எனலாம்- என்றார். (எ-110)

# பால் தேநீர் 100/=



கொழும்பு, மார்ச் 21

பால் தேநீரின் விலை 100 ரூபாவாக அதிகரிக்க நேரிடும் என்று இலங்கை சிற்றுண்டிச் சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. தற்போதைய நிலைமையால் உணவகங்களில் பால் தேநீர் விநியோகம் இடைநிறுத்தப்படவுள்ளது என்றும் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, உள்நாட்டு பால்மாவின் விலையை அதிகரிப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. உள்நாட்டுப் பால்மா உற்பத்தியை அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது என்று கால்நடை இராஜாங்க அமைச்சர் டி.பி.ஹேரத் தெரிவித்துள்ளார். (ம-4-இ)

# வங்கக்கடலில் தாழமுக்கம் சூறாவளியாக மாறக்கூடும்!

### மீனவர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 21

வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் 48 மணித்தியாலங்களில் சூறாவளியாக தீவிரம் அடையும். அதனால் மறு அறிவித்தல் வரும்வரை வங்கக் கடலில் மீன்பிடிக்கச் செல்வதையும், கடல் வழியாகச் செல்வதையும் மீனவர்கள் தவிர்க்க வேண்டும் என்று வளிமண்டலவியல் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் மெரில் மெண்டிஸ் எச்சரித்துள்ளார்.

ஊவா மாகாணம் மற்றும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் சில இடங்களில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யலாம். வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும், அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் காற்று அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர்வரை அதிகரித்து வீசக்கூடும். பலத்த காற்று மற்றும் இடியுடன் கூடிய மழையால் ஏற்படக்கூடிய அபாயங்களைக் குறைக்கத் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்குமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (ம-4-இ)

# தெற்கிலிருந்து கொண்டுவந்து விடப்பட்ட காட்டுயானைகளால்தான் சேதங்கள்!

### பொதுமக்கள் விசனம்

மன்னார், மார்ச் 21

தென்னிலங்கையிலிருந்து வடக்கிலுள்ள தமிழர் பிரதேசங்களில் கொண்டுவந்து விடப்பட்ட காட்டு யானைகளால் பெருமளவில் சேதம் ஏற்படுகின்றது என்று கட்டையடம்பன் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மன்னார் வனப்பகுதியில் விடப்பட்ட யானை ஒன்று, சில தினங்களுக்கு முன்பாக கட்டையடம்பன் பகுதியில் உள்ள வீட்டுக்குள் புகுந்து மூன்று பிள்ளைகளின் தாய் ஒருவரை அடித்துக்கொன்றது. [illegible] இரு வருடங்களுக்கு [illegible] கிடந்தகுளம் பகுதியிலும் ஒருவரை அடித்துக்கொன்றது. அத்துடன் அப்பகுதி கிராமங்களில் செய்யப்படும் மேட்டு நிலப் பயிர்களையும் விவசாய நிலங்களையும் அழித்து நாசம் செய்கிறது. எனவே இது தொடர்பாக [illegible] கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-14,213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொழும்பில இருந்தால் எதிர்க்கட்சியளின்ர ஆர்ப்பாட்டம், பேரணி அது இதுவெண்டு ஒரே தலையிடி அதால ஒருக்கா கே.கே.எஸ் ஆமியின்ர விடுதியில தங்கி ரிலாக்ஸா இருக்கலாமெண்டு யாழ்ப்பாணத்துக்கு வந்தார் மஹிந்தர். சாட்டில்லாமல் வந்தாலும் சிக்கல் எல்லோ. சனங்கள் டீசல், பெற்றோல் இல்லாமல் வேலைக்கே போகேலாமல் இருக்கேக்க, இவர் சும்மா விசிட் அடிச்சால் அதை வைச்சே எதிர்க்கட்சியள் ஆளை உண்டு இல்லையெண்டு பண்ணிப் போடுவினம். அதால மத்திய நிலையம் திறப்பு எண்டு ஒரு சாட்டை சொல்லிக் கொண்டு வந்தவர்.

சரி ஓய்வெடுக்க வந்தவர் ஆமியின்ர விடுதியில இருந்திட்டு அப்பிடியே போயிருக்கலாம். ஆனால் அவர் வந்ததை வேஸ்ட் ஆக்கக் கூடாதெண்டு இஞ்ச இருந்த கொஞ்சப்பேர், 'நயினாதீவுக்குப் போகலாம்', 'கந்தரோடைக்கு அடிக்கல் நடலாம்' 'நல்லூருக்குப் போவம்' எண்டு ஒவ்வொரு புரோக்கிராமாப் போட்டிருக்கினம். கோயில், குளம், விகாரை எண்டால் போறதுக்கு மஹிந்தருக்கு தனி விருப்பம். அதால அவை சொல்லுறதுக்கெல்லாம் தலையாட்டினார். ஆனால் அவர் எந்த ஆர்ப்பாட்டம், பேரணிக்குப் பயப்பிட்டு இஞ்ச ஓடி வந்தாரோ, அதே ஆர்ப்பாட்டங்கள், கவனவீர்ப்புகள் அவர் போக நினைச்ச இடங்களுக்கு முன்னால நடக்க என்ன செய்யிறதெண்டு தெரியாமல், அந்தப் பயணங்களை மாத்த வேண்டியதாப் போச்சு.

கந்தரோடையில அடிக்கல் நடுறதும், நல்லூர்க் கந்தன் வழிபாடும் இப்பிடி ஆர்ப்பாட்டப் பயத்தால அடிபட்டுப் போச்சுது. வழக்கமா மஹிந்தர் யாழ்ப்பாணம் வந்தால் நல்லூருக்குப் போகாமல் விடமாட்டார். ஆனால் இப்ப அவருக்கு இருக்கிற வருத்தத்துக்கும், மன உளைச்சலுக்கும் இப்பிடியான ஆர்ப்பாட்டங்கள் சிக்கலைக் கொண்டந்திடுமாம். அதால தான் 'பிச்சை வேண்டாம் நாயைப் பிடி'எண்ட கணக்கில நல்லூர்ப் பிளானை அப்பிடியே இரவோடிரவா மாவிட்டபுரத்துக்கு மாத்திட்டாராம். நல்லூரிலையும் இருக்கிற கந்தன் தானே மாவிட்டபுரத்திலையும் இருக்கிறார் எண்டு மனசை மஹிந்தர் தேத்தினவராம். ஆனால் என்னதான் சொன்னாலும் இப்ப நல்லூர்க் கந்தன்தான் கெத்து.

இந்தியப் பிரதமர் மோடி யாழ்ப்பாணம் வரேக்கையும், நல்லூரில அவருக்காக நேரத்தை மாத்தி கதவு திறக்க ஏலாது எண்டும், மோடியும் மேலங்கி இல்லாமல் தான் கோயிலுக்கை போகலாம் எண்டும் நல்லூரான் கொண்டிசன் போட்டவர். அதால மோடியும் நல்லூருக்கு போகாமல் கீரிமலைக்குப் போனவர். அப்பிடித்தான் இப்ப மஹிந்தரும் நல்லூருக்குப் போகாமல் மாவிட்டபுரத்துக்கு போக வேண்டி வந்திட்டு.

முந்தி இதே மஹிந்தர், மடுவுக்குப் போக இயக்கம் விடேலை எண்டதால 'என்ர ஆட்சியில, என்ர நாட்டுக்க இருக்கிற மடுவுக்குப் போகவிடாத புலிகளை அழிப்பன்' எண்டு சொன்னவர். ஆனால் பரிதாபம் என்னெண்டால், இப்ப புலிகள் இல்லாக் காலத்தில கூட, அவரின்ர ஆட்சியில, அவரின்ர நாட்டில உள்ள ஒரு கோயிலுக்குக்கூட அவரால நினைச்ச மாதிரி போய்வர ஏலாமல் கிடக்கே.




- பட்சி

# மின் கட்டணமும் விரைவில் 50 வீதத்தால் அதிகரிக்கும்!

**கொழும்பு, மார்ச் 21**

**மின்சாரக் கட்டணத்தை 50 வீதத்தால் அதிகரிக்க வேண்டும் என்று இலங்கை மின்சார சபை அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது என்று அறியமுடிகிறது.**



எரிபொருள் விலை அதிகரிப்பால் ஏற்பட்ட இழப்பைச் சரி செய்வதற்காக இந்த விலை அதிகரிப்பைக் மின்சாரசபை கோரியுள்ளது. இலங்கை மின்சார சபை தற்போது ஒரு அலகுக்கு 9 ரூபா இழப்பை எதிர்கொள்கின்றது. எரிபொருள் விலை அதிகரிப்புக்கு முன்னர் இலங்கை மின்சார சபை 35 வீத அதிகரிப்பைக் கோரியிருந்தது. தற்போது 50 வீத அதிகரிப்பைக் கோருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

மின்சார சபையின் தலைவர் எம்.எம்.சி பெர்னாண்டோ இது தொடர்பில் தெரிவித்ததாவது:-

இழப்புகளை எதிர்கொள்ளாமல் பாதுகாப்பான நிலையில் மின்சார சபை செயற்படுவதை உறுதி செய்வதற்கு கட்டண அதிகரிப்பு அவசியம். எங்களுக்கு ஒரு அலகுக்கு 9 ரூபா இழப்பு ஏற்படுகின்றது. இந்த இழப்புகளைத் தவிர்ப்பதற்காக இலங்கை மின்சார சபை ஒரு அலகின் விலையை 25 அல்லது 26ஆக அதிகரிக்க வேண்டும். இது உழைப்பதை நோக்கமாகக் கொண்டதல்ல. இழப்பைத் தவிர்ப்பதை நோக்கமாகக் கொண்டது - என்றார். (ம-4-இ)

## எரிபொருள் விநியோகத்துக்கு பவுஸர்களுக்கு டீசல் இல்லை

கொழும்பு, மார்ச் 21

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் எரிபொருள் நிலையங்களுக்கு வழங்கப்பட்ட எரிபொருளை விநியோகிப்பதற்கு பவுஸர்களுக்குப் போதிய டீசல் இல்லை என்று பவுஸர் சாரதிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு அறிவிக்கப்பட்டு, போதியளவு டீசல் பவுஸர்களுக்கு ஒதுக்கிக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-14-ரி1)

## மாலைதீவிலிருந்து வரும் எரிவாயு தாங்கிக் கப்பல்

கொழும்பு, மார்ச் 21

மாலைதீவிலிருந்து 3 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் எரிவாயு கொண்ட கப்பலொன்று இன்று நாட்டை வந்தடையும். அதற்கான கட்டணத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த 17ஆம் திகதி நாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட 3 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் எரிவாயு எதிர்வரும் 2 நாள்களுக்குப் போதுமானது. இன்று நாட்டை வந்தடையவுள்ள கப்பலில் உள்ள எரிவாயுவை உடனடியாக சந்தைக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் நிறுவனம் தெரிவித்துள்ளது. (ம-4-இ)



## எரிபொருள் பெறுவதற்கு மக்கள் நீண்ட வரிசை!

### மன்னாரிலும் தொடர்கதை

மன்னார், மார்ச் 21

மன்னார் மாவட்டத்தில் எரிபொருள் பெறுவதற்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பது தொடர்கின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

மண்ணெண்ணெய் கொள்வனவு செய்வதற்காக நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். மன்னார் மீனவர்களும் மீன்பிடிக்குத் தேவையான எரிபொருள் இல்லாமையால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (ம-14-213)

## மின்சாரக் கட்டணம் 5 மடங்காக வாய்ப்பு

### ஹிருணிகா தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 21

மின்சாரக் கட்டணம் ஐந்து மடங்கு அதிகரிக்கும் என்று எதிர்க்கட்சி உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்துள்ளார்.



கண்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய அரசு எவரின் ஆலோசனையையும் செவிமடுப்பதில்லை, தன்னிச்சையாக தீர்மானம் எடுக்கின்றது.

இறுக்கமான பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்தினால் அரசுக்கு எதிர்க்கட்சி ஆதரவளிக்கும். எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சிறந்த பொருளாதார அறிவுள்ளது.

நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச தன்னிச்சையாகச் செயற்படுகின்றார்.

இந்தியாவிடமிருந்து பெற்ற கடனைச் செலவு செய்த பின்னர், அவர் கடன் பெறுவதற்காக வேறு ஒரு நாட்டுக்குச் செல்வார்.

ஜனாதிபதியாலோ பிரதமராலோ பஸில் ராஜபக்சவின் நடவடிக்கைளைக் கட்டுப்படுத்த முடியவில்லை - என்றார். (ம-4-இ)

## அரச நிறுவனங்களுக்கு எரிபொருள் முன்னுரிமை

யாழ்ப்பாணம், மார்ச் 21

வடக்கு மாகாணத்தில் அரச நிறுவனங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் விநியோகிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பான அறிவுறுத்தலை வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மு.நந்தகோபாலன், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கு வழங்கியுள்ளார்.

வடக்கு மாகாண பிரதம செயலாளரின் அறிவுறுத்தலுக்கமைய கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படுகின்ற எரிபொருள் நிரப்பு நிலையங்களில், அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நோயாளர் காவு வண்டி சேவைகள் ஆகியவற்றின் சேவைகளுக்கு முன்னுரிமை வழங்கி, அவற்றுக்கு விநியோகிக்கக் கூடியதாக போதிய எரிபொருள்களை இருப்பாக பேணுவதற்குரிய சீரான பொறிமுறைகளை உருவாக்குமாறு மேற்படி அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (ம-4-17)




## மன்னார் பிரதேசசபைக்கு தீயணைக்கும் இயந்திரம்

மன்னார், மார்ச் 21

மன்னார் பிரதேசசபைக்கு தீயணைக்கும் இயந்திரம் கொழும்பு உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சில் வைத்து அண்மையில் கையளிக்கப்பட்டது.

மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தானின் கோரிக்கைக்கு அமைய குறித்த இயந்திரம் கையளிக்கப்பட்டது. (ம-14-60)

## தேசிய கட்டமைப்புக்குள் சூரியகல மின்னுற்பத்தி

### விரைவில் நடவடிக்கை என்று அமைச்சர் ஜோன்ஸ்டன் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 21

அநேகமான வீடுகள், நிறுவனங்கள் மற்றும் சூரிய கலங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை கூடிய விரைவில் தேசிய மின்கட்டமைப்புக்குள் இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று நெடுஞ்சாலைகள் அமைச்சரும் அமைச்சரவை உபகுழுவின் தலைவருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

சூரிய கலங்கள்மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை தேசிய மின் கட்டமைப்புடன் சேர்க்காமை மற்றும் தாமதப்படுத்துவது தொடர்பில் துரிதமாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு அமைச்சரவை உபகுழு உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளது. எனவே கூடிய விரைவில் சூரிய கலங்கள் மூலம் மேற்கொள்ளும் மின்சாரம் தேசியக் கட்டமைப்புக்குள் இணைக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு-கேது பெயர்ச்சி



## 21.3.2022 முதல் 8.10.2023 வரை

**ராகு-கேது பெயர்ச்சி, வாக்கிய பஞ்சாங்கத்தின்படி எதிர்வரும் 21ஆம் திகதி பிற்பகல் 3.02 மணிக்கு பெயர்ச்சி ஆகிறார். இதில் ராகு ரிஷபத்தில் இருக்கும் கார்த்திகை 2ஆம் பாதத்திலிருந்து மேடராசியில் இருக்கும் கார்த்திகை 1ஆம் பாதத்துக்கும், கேது விருச்சிகத்தில் இருக்கும் விசாகம் 4ஆம் பாதத்திலிருந்து, ஜென்ம ராசியான துலாம்ராசி விசாக நட்சத்திரம் 3ஆம் பாதத்துக்கும் பெயர்ச்சியாக உள்ளார். திருக்கணித பஞ்சாங்கத்தின்படி 2022 ஏப்ரல் 12 ஆம் திகதி பிற்பகல் 1.38 மணியளவில் ராகு - கேது பெயர்ச்சி நிகழ்கிறது.**

கொள்கையை விட்டுக்கொடுக்காத இடபராசியினரே...! நீங்கள் மற்றவர் சுதந்திரத்தில் ஒருபோதும் தலையிடமாட்டீர்கள். நியாயத்தின் பக்கம் நின்று அதர்மத்தை எதிர்த்துப் போராடுவீர்கள். வாக்குறுதி தந்துவிட்டால் அதை நிறைவேற்றும் வரை ஓயமாட்டீர்கள். உங்களுக்கு இந்த ராகுவும், கேதுவும் இணைந்து எப்படிப் பட்ட பலன்களை தரப்போகிறார்கள் என்பதைப் பார்ப்போம்.

**ராகுவின் பலன்கள்:**
இதுவரை உங்கள் ராசியில் அமர்ந்துகொண்டு திக்கு திசையறியாது திண்டாட வைத்ததுடன், காரண காரியமே இல்லாமல் பல பிரச்சினைகளில் சிக்க வைத்த ராகுபகவான் ராசிக்கு 12 ஆம் வீட்டுக்கு வந்து அமர்கிறார். மனதில் நிம்மதி பிறக்கும். இதுவரையிலும் அடிக்கடி தலைவலி, முதுகுவலி, கால் வலி என அவதிப்பட்ட நீங்கள், இனி உடல் சார்ந்த பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள்.




உங்களின் மனதில் இருந்த வீண்பயம் நீங்கி தைரியமும் தெளிவும் உண்டாகும். நிம்மதியான தூக்கம் வாய்க்கும். மற்றவர்களுக்கு உதவப்போய் நீங்கள் பிரச்சினைகளில் சிக்கித் தவித்தீர்களே! அந்த நிலையெல்லாம் மாறும். குடும்பத்தில் சந்தோஷம் குடிகொள்ளும். சந்தேகத்தாலும், வாக்குவாதத்தாலும் பிரிந்திருந்த கணவன்-மனைவி ஒன்று சேர்வீர்கள். உங்களுக்குள் கலகம் ஏற்படுத்தியவர்களை ஒதுக்கித் தள்ளுங்கள். வரவேண்டிய பணம் கைக்கு வந்து சேரும். வீட்டில் அடுத்தடுத்து கல்யாணம், கிரகப் பிரவேசம் என நல்லதெல்லாம் நடந்துகொண்டேயிருக்கும். தாயாருக்கு உடல்நிலை மேம்படும். அவருக்கு இருந்துவந்த மூட்டுவலி, நீரிழிவு நோய் விலகும்.

**சூரியனின் நட்சத்திரமான கார்த்திகை 1 ஆம் பாதத்தில்:** 21.3.2022 முதல் 22.5.2022 வரை ராகுபகவான் கார்த்திகை 1 ஆம் பாதத்தில் செல்கிறார். பூர்வீகச் சொத்துப் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும். மனதில் தன்னம்பிக்கை மிளிரும்.
**சுக்ரனின் பரணி நட்சத்திரத்தில்:** 23.05.2022 முதல் 29.01.2023 வரை பரணியில் ராகுபகவான் செல்வதால், சோம்பல் நீங்கும். பணப்பற்றாக்குறை விலகும். புதிய டிசைனில் நகை வாங்குவீர்கள். தடைப் பட்ட வேலைகளை விரைந்து முடிப்பீர்கள்.
**கேதுவின் அச்சுவினி நட்சத்திரத்தில்:** 30.01.2023 முதல் 08.10.2023 முடிய ராகுபகவான் அச்சுவினியில் சஞ்சரிக்கிறார், ஆகவே, இந்தக் காலகட்டத்தில் மன உளைச்சல், காரியத்தடை, பேச்சால் பிரச்சினை, உடல்நலக்குறைகள் வரக்கூடும். அரசாங்கல் காரியங்களில் அலட்சியம் வேண்டாம். எவரையும் நம்பி முக்கிய முடிவுகள் எடுக்காதீர்கள். சிலருக்கு சிறுசிறு விபத்துகள் ஏற்படக்கூடும்; கவனம் தேவை.
**வியாபாரத்தில்:** புதிய வகையில் முதலீடு செய்ய பணம் கிடைக்கும். சந்தை நிலைவரம் அறிந்து புதிய சரக்குகளைக் கொள்முதல் செய்வீர்கள். பழைய சரக்குகளை விற்றுத் தீர்ப்பீர்கள். போட்டியாளர்களை அனுபவ அறிவால் வெல்வீர்கள். அடிக்கடி விடுப்பில் சென்ற வேலையாட்களை மாற்றிவிட்டு புதிய பணியாளர்களை அமர்த்துவீர்கள். ஏற்றுமதி, இறக்குமதியால் அதிக இலாபம் வரும். உத்தியோகத்தில் மாறுபட்ட அணுகுமுறையால் உயரதிகாரியைக் கவர்வீர்கள். பதவி உயர்வு, சம்பள உயர்வு உண்டு. உங்களைப் பகையாக பார்த்த சக ஊழியர்கள் இனி நட்புக் கரம் நீட்டுவார்கள்.
இதுவரையிலும் உங்களின் ராசிக்கு ஏழாவது வீட்டில் இருந்துகொண்டு உங்களுக்கும், உங்கள் மனைவிக்கும் இடையே வாக்குவாதங்களையும், சண்டை சச்சரவுகளையும், உடல் நலக்குறைவையும் அடுக்கடுக்காக தந்து உங்களை அல்லல்படுத்திவந்தார் கேதுபகவான். அவர் தற்போது உங்கள் ராசிக்கு 6 ஆம் வீட்டில் அடியெடுத்து வைக்கிறார். ஆகவே பிரச்சினைகளுக்கான காரணத்தைக் கண்டறிந்து நீக்கும் வல்லமையைத் தருவார்.
குடும்பத்தில் கலகலப்பும் சந்தோஷமும் கூடும். சந்தேகத்தாலும், ஈகோ பிரச்சினையாலும் பிரிந்திருந்த தம்பதியர் ஒன்று சேருவீர்கள். பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் உண்டாகும். புதிய சொத்து வாங்குவீர்கள்.
**குருவின் விசாகம் நட்சத்திரத்தில்:** 21.03.2022 முதல் 24.09.2022 வரை கேது பகவான் விசாகத்தில் செல்கிறார். கொஞ்சம் அலைச்சலும் பதற்றமும் உண்டு. சில தருணங்களில் பெரிய மனிதர்களின் பகையைச் சம்பாதிக்க நேரிடும்; முன்கோபத்தைத் தவிர்க்கவும்.
**ராகுவின் சுவாதி நட்சத்திரத்தில்:** 25.09.2022 முதல் 04.06.2023 வரை கேது சுவாதியில் செல்வதால் பயம், தாழ்வுமனப்பான்மை, சின்னச் சின்ன அறுவை சிகிச்சைகள், வீண் செலவுகள் வந்து நீங்கும்.
**செவ்வாயின் சித்திரை நட்சத்திரத்தில்:** 04.06.2023 முதல் 08.10.2023 வரையிலும் சித்திரையில் சஞ்சரிக்கிறார் கேது. ஆகவே சகோதரர்கள் பாசப்பிணைப்புடன் இருப்பார்கள். அவர்களால் உதவிகள் உண்டு. மனைவி வழியிலும் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

## காணியைப் பகிர்ந்தளித்து வாழ்வாதாரத்துக்கு உதவுக

மன்னார், மார்ச் 21
வனவளத் திணைக்களத்தின் பிடியிலுள்ள மன்னார், தட்சணாமருதமடு குளத்துக்குட்பட்ட அரச காணியை பொதுமக்களுக்குப் பகிர்ந்தளிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் தட்சிணா மருதமடு கிராம அபிவிருத்திச் சங்கத்தனர் தெரிவித்ததாவது:
தட்சிணாமருதமடு பகுதியில் 1956 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 39 குடும்பத்தினர் குடியேற்றப்பட்டார்கள்.
அப்போது ஐந்து ஏக்கர் வயல் காணியும் இரண்டு ஏக்கர் மேட்டு நிலக் காணியும் அரசாங்கத்தால் வழங்கப்பட்டது.
தற்போது இப்பகுதியில் 250க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசிக்கின்றனர்.
ஆனால், ஏற்கனவே வழங்கப்பட்ட 5 ஏக்கர் காணியைத்தான் குடும்ப அங்கத்தவர்கள் பகிர்ந்து பயன்படுத்தி வருகின்றார்கள்.
குறித்த பகுதியிலுள்ள 300 ஏக்கருக்கும் மேற்பட்ட அரசகாணியை வன வள திணைக்களத்தினர் பிடித்து வைத்துள்ளனர்.
அவற்றை பொதுமக்களுக்குப் பகிர்ந்தளித்தால் உதவியாக இருக்கும்- என்றனர்.
(வ-213)


## அமைச்சரவைத் தீர்மானத்தை ஒருபோதும் ஏற்கமாட்டோம்
### உறவுகள் கண்டனம்

யாழ்ப்பாணம், மார்ச் 21
வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பாக அமைச்சரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் கண்டித்துள்ளது.
இதுதொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;
போர் மௌனிக்கப்பட்டதன் பின் இலங்கை இராணுவத்தின் கையில் ஒப்படைக்கப்பட்ட உறவுகளையும், சரண டைந்த உறவுகளையும், விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட உறவுகளையும் விடுவிக்கக்கோரி ஆரம்பிக்கப்பட்ட எமது போராட்டம் தற்போதும் தொடர்கின்றது.
உறவுகளின் போராட்டத்தை மழுங்கடித்து தனது விசுவாசத்தை காட்டும் வகையில் நீதியமைச்சர் பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார். தற்போது "ஒரு லட்சம் [illegible] நிதமும் [illegible] அமைச்சரவை அனுமதி பெற்றிருக்கின்றார்.

> **குற்றம் இழைத்தவர்கள் பணத்தைக் கொடுத்துத் தமது குற்றங்களை மூடி மறைக்க விளைவதை சர்வதேச சமூகம் மௌனியாகப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது.**

இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இதனால் எமது நீதிக்கான போராட்டத்தை முற்றிலுமாக உதாசீனப்படுத்துவதுடன், சிங்கள அரசின் உண்மையான முகம் மீண்டும் ஒருமுறை வெளிக்காட்டப்பட்டுள்ளது. குற்றம் இழைத்தவர்கள் பணத்தைக் கொடுத்துத் தமது குற்றங்களை மூடி மறைக்க விளைவதை சர்வதேச சமூகம் மௌனியாகப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாதென்று வேண்டுகோள் விடுக்கின்றோம் -என்றுள்ளது.
(ஒ-4-7)

## விஷமிகளால் வாகனம் எரியூட்டல்



முல்லைத்தீவு, மார்ச் 21
வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கப் ரக வாகனம் இனந்தெரியாதவர்களால் எரியூட்டப்பட்ட சம்பவம் முல்லைத்தீவு - விசுவமடு, ரெட்பானா பகுதியிலுள்ள வீடொன்றில் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை இடம் பெற்றது. அதிகாலையில் சத்தம் கேட்டு வீட்டு உரிமையாளர் வெளியில் வந்து பார்த்தபோது, வாகனம் எரிவதை அவதானித்துள்ளார்.
இதையடுத்து தண்ணீர் ஊற்றி அணைத்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர். சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.
(வ-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடனான 'டீலை' வெளிப்படுத்த வேண்டும்

## வலியுறுத்துகின்றார் ரஹ்மான்



கொழும்பு, மார்ச் 21

**இந்தியாவிடமிருந்து ஒரு பில்லியன் டொலர் கடனைப் பெற்றுக்கொள்வதற்காக செய்து கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் எவை என்பதை அரசாங்கம் நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும். மத்தல விமான நிலையம், சம்பூர் அல்லது யாழ். தீவுகள் என இந்தியாவுக்கு எவற்றை வழங்கத் திட்டமிட்டுள்ளனர்?**

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கேள்வியெழுப்பினார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உரிய தீர்மானங்களை பொருத்தமான நேரத்தில் எடுக்காமைக்கான காரணம் என்ன? ஜனாதிபதியை தீர்மானங்களை எடுக்கவேண்டாமென்று கூறுபவர்கள் யார்? கடந்த 2 ஆண்டுகளாகவே மக்கள் பல தியாகங்களைச் செய்துள்ளனர்.

அவ்வாறிருக்கையில் மக்களிடமிருந்து ஜனாதிபதி வேறென்ன தியாகங்களை எதிர்பார்க்கின்றார்? தற்போது எஞ்சியிருப்பது கயிறொன்றை வாங்கித் தற்கொலை செய்து கொள்வது மாத்திரமேயாகும்.

அரசாங்கத்திலிருந்து விலகிய அமைச்சர்களே இனிமேலும் ஜனாதிபதியின்மீதுநம்பிக்கைவைக்க முடியாது என்று கூறுகின்ற நிலையில் மக்கள் எவ்வாறு நம்புவார்கள்? மக்கள் கேட்டுக் கொண்டமையின் காரணமாகவே தான் அரசியலில் பிரவேசித்தேன் என்று ஜனாதிபதி கூறுகின்றார்.

அவ்வாறெனில் தற்போது அவரைப் பதவிவிலக வேண்டுமென்று மக்கள் கோரும்போது அவர் பதவியை விட்டுச் செல்ல வேண்டும்.

மேலும் இரண்டு ஆண்டுகள் ஜனாதிபதி பதவியில் நீடித்தால் நாடு மேலும் நாசமடைந்து விடும் என்று மக்கள் அஞ்சுகின்றனர்.

சமையல் எரிவாயுக் கப்பல்கள் இரண்டு கடந்த 12 நாள்களாக நங்கூரமிட்டுள்ளன. இவற்றுக்கான தாமதக் கட்டணம் 4 இலட்சத்து 22 ஆயிரம் டொலராகும். அதாவது 12 கோடி ரூபா தாமதக் கட்டணமாகச் செலுத்தப்பட்டுள்ளது. நாடு பெரும் பொருளாதார நெருக்கடியிலுள்ள நிலையில் இவ்வாறு வீணாக செலவிடும் பணம் மக்களுடையதாகும் - என்றார். (எ-இ)



# காலை இழந்த பெண்ணுக்கு பிரதமரின் பாரியாரால் உதவி

கொழும்பு, மார்ச் 21

நீரிழிவு நோயால் காலை இழந்த பெண் ஒருவருக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் பாரியாரால் செயற்கைக் கால் வழங்கப்பட்டது.

சுமார் பத்து வருடங்களாக நீரிழிவு நோயால் அவதிப்பட்டு வந்த றம்புக்கனை, சியம்பலங்கமுவ பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய குறித்த பெண், ஷிரந்தி ராஜபக்சவிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்தச் செயற்கைக் கால் வழங்கப்பட்டது. (வ-இ)

# இலங்கையில் அதிகரித்த நைஜீரிய குற்றவாளிகள்!

கொழும்பு, மார்ச் 21

நாட்டில் அதிகரித்துள்ள இணையக் குற்றங்களை கட்டுப்படுத்த தேசிய கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டுமென கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது. அதேநேரம் நைஜீரிய சைபர் குற்றவாளிகளை நாடு கடத்தவும் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

தற்போது ஒரு தேசிய சைபர் பாதுகாப்பு உத்தி உருவாக்கப்பட்டு வருவதுடன், வெளிநாட்டு சைபர் குற்றவாளிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் நைஜீரியர்கள்.

அதேநேரம், 12 மாதக் காலப்பகுதியில், 5 ஆயிரத்து 400 முறைப்பாட்டுத் தரவுகளை கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவு பதிவு செய்துள்ளது. இந்தக் குற்றங்களில் 75 வீதமானவை இலங்கையர்களாலும், 25 வீதமானவை நைஜீரியர்களாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அச்சுறுத்தி பணம் பறித்தல் தொடர்பாக 670 முறைப்பாடுகள், சமூக ஊடக சுயவிவரங்களை ஹேக்கிங் செய்வது தொடர்பாக 370 முறைப்பாடுகள், பாலியல் துன்புறுத்தல் தொடர்பாக 260 முறைப்பாடுகள், ஆயிரத்து 400 அவதூறு வழக்குகள், 20 சைபர் டெரரிசம் தொடர்பான முறைப்பாடுகள் மற்றும் 2 ஆயிரத்து 280 சைபர் கிரைம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு கணினிகள் பற்றாக்குறை உள்ளதுடன், பெரும்பாலான ஊழியர்கள் அலுவலக நோக்கங்களுக்காக தங்கள் தனிப்பட்ட சாதனங்களைப் பயன்படுத்துகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# சாரதி அனுமதிப் பத்திரங்களை தற்காலிகமாக வழங்கத் திட்டம்

கொழும்பு, மார்ச் 21

ஒரு வருடத்துக்கு செல்லுபடியாகும் வகையில், தற்காலிகமாக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சாரதி அனுமதிப் பத்திரத்தை அச்சிடும் அட்டைகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடே இதற்கான காரணமாகும்.

நாட்டில் சாரதி அனுமதிப்பத்திரம் அச்சிடும் அட்டைகளை விரைவில் இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

அட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டதன் பின்னர், மூன்று மாதங்களில் சாரதி அனுமதிப்பத்திரம் வீட்டுக்கு அனுப்பப்படும் எனப் போக்குவரத்து அமைச்சர் குறிப்பிட்டார்.

50 ஆயிரம் சாரதி அனுமதிப் பத்திரத்துக்கான அட்டைகளைக் கொள்வனவு செய்வதற்கு 6 லட்சம் யூரோ தேவைப்படுகின்றது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, இந்த அட்டைகளை நாட்டில் தயாரிக்கும் நோக்கில் பல நிறுவனங்களுடன் கலந்துரையாடப்படுகின்றது என்றும் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம மேலும் குறிப்பிட்டார். (ம)

# மீண்டும் சீனாவிடம் கையேந்தும் இலங்கை

கொழும்பு, மார்ச் 21

அந்நியச் செலாவணி நெருக்கடியை அடுத்து, இந்திய உதவியைப் பெற்றுக்கொண்ட இலங்கை தற்போது சீனாவிடம் மீண்டும் உதவியைக் கோரியுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடன் கொடுப்பனவுகளைத் தாமதப்படுத்தல் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள், மூலப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கான கடன் ஏற்பாடுகளுக்காக மேலதிக நிதி போன்ற உதவிகளை வழங்குமாறு இலங்கை சீனாவிடம் கோரியுள்ளது.

இலங்கை இந்த ஆண்டு மாத்திரம், சீன வங்கிகளுக்கு 100 மில்லியன் அமெரிக்க டொலருக்கு அதிகமான தொகையை கடன் தவணையாக செலுத்த வேண்டியுள்ளது. நாடு தற்போதைய நெருக்கடியிலிருந்து மீளும் வரை இந்தக் கொடுப்பனவுகளை புதிய திருத்தப்பட்ட கொடுப்பனவு முறைகளுக்கு மாற்றும் கோரிக்கையை அரசாங்கம் சீனாவிடம் முன்வைத்துள்ளது

அதுமட்டுமின்றி, உள்ளூர் தொழில்களுக்கு தேவையான மூலப்பொருள்களை சீனாவில் இருந்து இறக்குமதி செய்யும் தனியான கடன் ஏற்பாட்டையும் இலங்கை அரசாங்கம் சீனாவிடம் கோரியுள்ளது. இந்தத் தகவலை இலங்கையிலுள்ள சீனத் தூதரகம் உறுதிச்செய்துள்ளது.

ஏற்கனவே அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் மருந்துப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக இலங்கை இந்தியாவிடமிருந்து ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடனைப் பெற்றுள்ளது.

இதற்கான உடன் படிக்கை கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர் புதுடில்லியில் கைச்சாத்தானது. அதேநேரம் எரிபொருள் கொள்வனவுக்காக இந்தியாவிடமிருந்து 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடனையும் இலங்கை பெற்றுள்ளது. (எ-இ)

## பொருண்மியம் நலிந்த குடும்பங்களுக்கு

# 2020ஆம் ஆண்டு விலையில் பொருள்களை வழங்குக

## ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைப்பு

கொழும்பு, மார்ச் 21

75 ஆயிரம் ரூபாவுக்கும் குறைவான மாத வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு குறைந்த விலையில் பொருள்களை வழங்க ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 2020ஆம் ஆண்டின் முற்பகுதியில் காணப்பட்ட விலையில் அத்தியாவசியப் பொருள்களை வழங்குவதற்கான வேலைத்திட்டத்தைத் தயாரிக்குமாறு உழைக்கும் வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கம் ஜனாதிபதியிடம் கோரியுள்ளது.

கட்டுப்பாடற்ற அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்தால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனச் சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் பொதுச் சேவை ஊழியர் சங்கம் கடந்த மார்ச் 15ஆம் திகதி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு எழுதிய கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளது. (வ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஏறத்தெரியும், இறங்கத் தெரியாதே!


'ஏறு ஏறு சங்கிலி, இறங்கு இறங்கு சங்கிலி, எட்டாத கொப்பெல்லாம் எட்டிவந்த சங்கிலி. அவன் யார்?'
- என்று அணிலைப் பற்றிய ஒரு விடுகதை எம்மிடையே உண்டு. இப்போது அதனை-
'ஏறு ஏறு சங்கிலி, இறங்கவே இறங்காத சங்கிலி, எட்டாத கொப்பெல்லாம் எட்டி நிற்கும் சங்கிலி. அவன் யார்?'
- என்று கேட்டால் சின்னக்குழந்தைகூட 'விலைவாசி' என்று விடையைச் சட்டென்று சொல்லிவிடும்.
அந்தளவுக்கு ஒவ்வொருநாளும் ஏதோ சில பொருள்களின் விலைகள் விண்ணைத் தொடுமளவுக்கு உயர்ந்தமை பற்றிய அறிவிப்புக்கள்வெளிவந்தபடியிருக்கின்றன. சில மாதங்களுக்கு முன்னர்வரை இந்த விலையுயர்வுகளுக்கு கொரோனாவைக் காரணம் காட்டினர். இப்போது டொலர் பெறுமதி கூடியதையும், உக்ரைன் போரையும் காரணம் காட்டுகின்றனர். எரிபொருள் விலையேறினாலும் உக்ரைன் சண்டைதான் காரணம், கீரைப்பிடி விலையேறினாலும் அதே உக்ரைன் போர்தான் காரணமென்கின்றனர்.

ஒருவகையில் இன்றைய பூகோளமயப் பொருளாதார உலகில் எங்கோ ஒரு நாட்டில் நிகழும் மாற்றம், இங்கும் எதிரொலிக்கத்தான் செய்யும். அதை மறுக்கமுடியாதுதான். ஆனால், போர் நடைபெறும் உக்ரைனைவிடவும் அதன் தாக்கம் பலமடங்காக இலங்கையில் எதிர்வினையாற்றுவதைத்தான் மக்களால் தாங்க முடியவில்லை. வடிவேலுவின் பாணியில் 'உருட்டு என்றாலும் ஒரு நியாயம் வேண்டாமா?' என்றே இந்த அரசாங்கத்தைப் பார்த்துக் கேட்கத் தோன்றுகின்றது. ஆனால், என்னதான் மக்கள் எதிர்ப்பை வெளியிட்டாலும், ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டு, பாணை எரித்து போராட்டம் நடத்தினாலும்கூட, அவற்றையெல்லாம் கணக்கிலே எடுக்காமல் தொடர்ந்தும் விலையேற்றங்களை இந்த அரசாங்கம் அனுமதித்தபடியே இருக்கின்றது. பால்தேநீரை இனிமேல் 100 ரூபாவாக விற்பனை செய்வதென தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. லாஃப் எரிவாயு சிலிண்டரின் விலையும் அதிகரித்திருக்கின்றது மின்சாரக் கட்டணமும் வெகுவாக உயர்த்தப்படவுள்ளது. இவற்றின் தாக்கத்தால் மீண்டுமொருமுறை சகல அத்தியாவசியப் பொருள்களின் விலையும் ஏறும். இப்படி ஏறு ஏறு சங்கிலியாக, ஒரே சுழற்சியில் மறுபடியும் மறுபடியும் பொருள்களின் விலை கூடுகின்றதே தவிர, அது இறங்குவதற்கான எந்த அறிகுறியுமில்லை.

இந்தியாவிடம் கடன் வாங்கினால் எல்லாம் சரியாகிவிடும், என்றும் விலை குறைந்துவிடும் என்றும் நம்பப்பட்டது. ஆனால், இந்தியாவின் கடன் கிடைத்த பின்னரும்கூட விலைவாசி ஏறிக்கொண்டேதான் போகின்றது. எரிபொருள் விலையை ஒரேநாளில் 77 ரூபாவால் அதிகரித்து, இலங்கை வரலாற்றில் சாதனை புரிந்தபோது 'உக்ரைன் சண்டையால் உலகச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை கூடிவிட்டது. அதனால் வேறு வழியின்றி நாமும் இப்படி தாறுமாறான அதிகரிப்பைச் செய்ய வேண்டியதாயிற்று' என அரசாங்கம் காரணம் சொன்னது. ஆனால், இப்போது உலகச்சந்தையில் கச்சா எண்ணெயின் விலை வெகுவாகச் சரிந்துவிட்டது. பல நாடுகள் தமது எரிபொருள் விலையை மீண்டும் முன்னையை பெறுமதிக்கே கொண்டுவந்துவிட்டன. ஆனால், இலங்கை ஏற்றிய விலையை இறக்காமல், இன்னும் எப்படி ஏற்றலாம் என்றே யோசிக்கின்றது. உலகச் சந்தையில் கச்சாஎண்ணெய் விலைகூடினால், எரிபொருள் விலையைக் கூட்டத் தெரிந்த அரசாங்கத்துக்கு, அதே உலகச் சந்தையில் விலை குறைந்தவுடன் இங்கும் விலையைக் குறைக்கத் தெரியவில்லையே.
'விலையேற்றத் தெரிந்த அரசே உனக்கு!
அதைக் குறைக்கத் தெரியாதா?' என்று பாடுவதைத் தவிர மக்களுக்கும் வேறுவழியில்லை இப்போதைக்கு.

நாளொரு நல்வார்த்தை

உயர்ந்த குறிக்கோளைக் கொண்ட வாழ்க்கையே பெருமையுள்ள வாழ்க்கை. - அல்மெரான்




# இந்தியாவை திட்டிவிட்டு கடன் கேட்டு கையேந்துகிறார்கள்

மனோ கிண்டல்



**கொழும்பு, மார்ச் 21**

**கடந்த காலங்களில் இந்தியாவைத் திட்டித் தீர்த்து, கரித்துக்கொட்டிய இலங்கை அரசு, இன்று, புதுடில்லியில் கைகட்டிக்கொண்டு கடன் பெறுகின்றது என்று தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
இந்தியாவிடம் நூறுகோடி அமெரிக்க டொலர் புதிய கடன்பெற்று அதன்மூலம் அங்கிருந்து உணவு, மருந்து, எண்ணெய் ஆகிய அத்தியாவசியப் பொருள்களையும் இலங்கை பெறுகின்றது. இந்தியக் கடனுதவி கிடைத்திராவிட்டால், இந்த சித்திரைப் புதுவருடம் ராஜபக்ச அரசுக்கு கடைசி வருடமாக இருக்கும். புத்தாண்டின் போது இலங்கை அரசின் நிலைமையும் சிரிப்பாய் சிரித்திருக்கும்.
அதேபோன்று சர்வதேச நாணயநிதியத்துடன் உரையாடி பழைய கடன்களை மறுசீரமைக்க முயல்கின்றனர், அதைத்தான் செய்ய வேண்டும். வேறு வழியில்லை. இதற்கு முன் ராஜபக்ச அரசாங்கங்கள் கண்மூடித்தனமாக கடன்வாங்கி, பிரயோசனமற்ற விடயங்களில் முதலீடு செய்து, வீணடித்து ஏற்றிவைத்துள்ள கடன் சுமையை, திருப்பிச் செலுத்த கால அவகாசம் பெற்று, மறு சீரமைக்காவிட்டால், இலங்கை அதோகதிதான்.
நாட்டை இந்த நிலைமைக்கு கொண்டு வந்துள்ள இந்த ராஜபக்சக்களின் மூளைகளை கொழும்பு நூதனசாலையில் வைத்து நாம் பாதுகாக்கவேண்டும். இந்தியாவின் தேசியப் பாதுகாப்பை கரிசனையில் எடுக்காமல் இலங்கையின் இன்றைய அரசு அராஜகமாக செயற்பட்டது. இந்த நிலைமை நீடித்து இருந்தால், இங்கும் ஒரு உக்ரைன் நிலைமை ஏற்பட்டு இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.
பொருளாதாரச் சீரழிவு மற்றும் அரசியல் உறுதியற்ற தன்மை ஆகியவற்றை இந்தியாவின் உதவியுடன் பாதுகாக்க முயலும் அரசு, இந்தியாவுடன் செய்து கொண்டுள்ள பரஸ்பர ஒப்பந்தங்களையும் நேர்மையுடன் அனுசரிக்கவேண்டும். இவற்றைக் கண்காணிக்கும் கடப்பாடு இந்திய அரசுக்கும் இருக்கின்றது-என்றுள்ளது. (ம-4,இ)

கடதாசித் தட்டுப்பாடு

## சாதாரண கடதாசியில் மின்கட்டணப் பட்டியல்

கொழும்பு, மார்ச் 21
நாட்டில் ஏற்பட்டுள்ள கடதாசித் தட்டுப்பாடு காரணமாக சாதாரண கடதாசியில் மின் கட்டணம் அறிவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றுஇலங்கைமின்சாரசபைதெரிவித்துள்ளது. கடதாசிகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக மின்கட்டணச் சீட்டுக்களை வழங்குவதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளது. இதனால், மின் கட்டணப் பட்டியல்கள் இதுவரை காலமும் அறிவிட்டு வந்த கடதாசிகளுக்குப் பதிலாக சாதாரணக் கடதாசிகளில் அவற்றை அறவிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று மின்சார சபையின் செய்தித் தொடர்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-4,இ)

நாளை 22.03.2022 செவ்வாய்க்கிழமை பங்குனி 08

சுபநேரம் : 10.47 - 12.17
ராகுகாலம்: 03.17 - 04.47

மானிப்பாய் மருதடி விநாயகர் கொடி, உலக தண்ணீர் தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** இன்று இடமாற்றம் பற்றிய பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும். தொழிலில் புதிய முதலீடு செய்வீர்கள், விருப்பம் நிறைவேறும். வேறு இடத்துக்குரிய பணி மாற்றத்துக்கான சிந்தனை மேலோங்கும் .

**இடபம்:** அரசாங்க விடய முயற்சியில் நற்பலன் கிடைக்கும். பண விவகாரத்தில் வந்த சிக்கல் அகலும். நிம்மதி அடைவீர்கள். விருப்பம் நிறைவேறப் பாடுபட வேண்டியிருக்கும்.

**மிதுனம் :** ஆபரணச் சேர்க்கை உண்டாகி சந்தோஷம் கூடும். குடும்பத்தினிடம் திருப்தியான மனநிலை காணப்படும். ஆடம்பரப் பொருள்கள் சேரும். உற்சாகம் அதிகரிக்கும்.

**கடகம்:** உடல் நலன்கருதி ஆரோக்கியமான உணவுகளை உண்பீர்கள். குடும்பத்தில் ஒருவரின் உடல் நலம் சீராகும். கோவிலுக்குச் செல்வீர்கள். தேவையற்ற பொருள் வாங்குவதால் வீண்செலவு ஏற்படலாம்.

**சிம்மம்:** வெளிநாட்டுக் கல்விக்கான முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள். நினைத்ததை நடத்தி முடிக்க நெருங்கிய நபர் கைகொடுப்பார். குழந்தைகளை பற்றிய சிறுகவலை வந்துபோகும்.

**கன்னி:** குடும்பத்தில் ஆரோக்கிய குறைபாடு ஏற்பட்டு மறையும். சொந்தத் தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது. குடும்பத்தில் ஒருவருக்குத் தடைபட்ட திருமணம் கூடும்.

**துலாம்:** மனதுக்குப் பிடித்த இடத்துக்குச் சென்று பொழுதைக் கழிப்பீர்கள். உறவினருடன் சச்சரவு நீங்கி நெருக்கம் அதிகரிக்கும். பொதுவாழ்வில் ஈடுபடுவதால் செல்வாக்கு, புகழ் கூடும்.

**விருச்சிகம்:** பலநாள் பிரச்சினைக்குப் புதிய தீர்வு புலப்படும். குடும்பத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் நாள். மகிழ்ச்சியான தகவல் வரும். நல்லவர் ஆதரவால் முன்னேறுவீர்கள். மகிழ்ச்சி கூடும்.

**தனுசு:** எதிர்பார்த்த வாய்ப்பு ஒன்று வருவதில் சிறு தடை இருக்கும். விலை உயர்ந்த பொருள்களின் பாதுகாப்பில் கவனம் தேவை. விரும்பிய பணி மாற்றத்துக்கான அறிகுறிகள் தோன்றும்.

**மகரம்:** பொறுப்பாகப் பணிபுரிபவர்களுக்கு வேலைப்பளு கூடும். பிறர் மீது பொறாமை உள்ளோர் சிரமத்துக்கு ஆளாவீர்கள். அசையாச் சொத்தில் முதலீடு செய்ய ஆர்வம் அதிகரிக்கும்.

**கும்பம்:** கடந்த ஓரிரண்டு நாள்களாக இருந்து வந்த பிரச்சினை தீரும். எதிர்பார்த்த நன்மை கைநழுவிச் சென்றால் கவலை வேண்டாம். நம்பிக்கைக்குரியவரின் செயலால் ஏமாற்றம் அடைவீர்கள்.

**மீனம்:** இன்று மந்தப்போக்கை நீக்கி நிதானத்தைக் கடைப்பிடிப்பீர்கள் . தைரியத்தை கைவிட வேண்டாம். பணிச்சுமை குறையும். கோபத்தைக் கைவிடவும். குடும்பத்தில் மகிழ்ச்சியான நாள்.

# ஹைப்பர் சொனிக் ஏவுகணைகளை களமிறக்கியது ரஷ்யா

## போர்நிறுத்தத்தை அறிவிக்குமாறு ஷெலன்ஸ்கி வேண்டுகோள்

**மொஸ்கோ, மார்ச் 21**
**அதிநவீன ஏவுகணையான ஹைப்பர் சொனிக் ஏவுகணைகளை ரஷ்யா உக்ரைன் தாக்குதலில் களமிறக்கியுள்ளது.**



இரு நாடுகளுக்கும் இடையே இரு வாரங்களுக்கு மேலாகப் போர் நீடித்து வருகின்றது. இந்தப் போரில் ரஷ்ய இராணுவம் முதன்முறையாக கின்சல் என்ற அதிநவீன ஹைப்பர் சொனிக் ஏவுகணைகள் மூலம் தாக்குதலை தொடங்கியுள்ளது.

இந்த ஏவுகணை மேற்பரப்பில் மட்டுமன்றி பூமிக்கு அடியிலுள்ள பதுங்கு குழிகள்வரை தகர்க்கும் திறன் கொண்டது. அத்துடன் 1,500 கி.மீ. முதல் 2,000 கி.மீ. வரை பாயும் திறன் கொண்டது. இந்த ஏவுகணை ஒலியைவிட 10 மடங்கு வேகத்தில் சீறிப் பாயக்கூடியது. உக்ரைனின் மேற்குப் பகுதியில் டெலியாடின் நகரில் ஆயுதக் கிடங்கு ஒன்றில் ஏவுகணைகள் உள்ளிட்ட அதிநவீன ஆயுதங்கள் வைக்கப்பட்டுள்ளதாகக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய அந்த ஆயுதக் கிடங்கை குறிவைத்து ரஷ்ய இராணுவம் நேற்றுமுன்தினம் ஹைப்பர் சொனிக் ஏவுகணை மூலம் தாக்குதல் நடத்தி தகர்த்துள்ளது.

அதில் அமெரிக்கா வழங்கிய அதிநவீன ஆயுதங்கள் இருந்தன எனக் கூறப்படுகிறது. இந்த நிலையில் உக்ரைன் ஜனாதிபதி ஷெலன்ஸ்கி தெரிவிக்கையில்;

ரஷ்யா காலதாமதமின்றி அமைதிப் பேச்சு நடத்த முன்வரவேண்டும். 4ஆவது முறையாக வலியுறுத்துகின்றோம். பேச்சுவார்த்தையையே நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். ஆனால், ரஷ்யா பொருட்படுத்தவில்லை. அமைதிக்கு வழிஏற்படுத்துங்கள் - என்று தெரிவித்துள்ளார். (ச-இ)

# கச்சா எண்ணெய் வாங்கலை அரசியலாக்காதீர்கள்!

## அமெரிக்காவுக்கு இந்தியா பதிலடி

புதுடில்லி, மார்ச் 21




ரஷ்யாவிடம் மலிவு விலையில் கச்சா எண்ணெய் வாங்க இந்தியா ஆர்வம் காட்டிவரும் நிலையில் அமெரிக்காவின் விமர்சனத்துக்கு இந்தியா மறைமுகமாகப் பதிலளித்துள்ளது. இந்தியாவின் கச்சா எண்ணெய் இறக்குமதி ஒப்பந்தங்களை அரசியலாக்கக்கூடாது எனத் தெரிவித்துள்ளது.

உக்ரைன் மீதான தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் ரஷ்யாவிலிருந்து கச்சா எண்ணெய் இறக்குமதிக்குத் தடைவிதிப்பதாக அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் அறிவித்தன.

ரஷ்யாவின் கச்சா எண்ணெய் வாங்கலை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் மறுத்துள்ளதால் மலிவு விலையில் கச்சா எண்ணெயை விற்பனை செய்ய ரஷ்யா முன்வந்துள்ளது.

இந்தநிலையில் இந்தியா ரஷ்யாவிடம் இருந்து முதற்கட்டமாக 30 லட்சம் பீப்பாய் கச்சா எண்ணெய் வாங்கவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இந்த விவகாரம் தொடர்பாக வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் ஜென் சாகி கருத்துத் தெரிவிக்கையில்,

" வரலாற்றுப் புத்தகங்கள் எழுதப்படும்போது நீங்கள் எங்கு நிற்க விரும்புகிறீர்கள் என்பதைப் பற்றி சிந்தியுங்கள். ரஷ்ய தலைமைக்கான ஆதரவு என்பது வெளிப்படையாக ஒரு பேரழிவுத் தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு படையெடுப்புக்கான ஆதரவாகும்" என்று சாகி கூறினார்.

இந்தநிலையில் அமெரிக்காவின் இந்தக் கருத்துக்கு, "இந்தியாவின் முறையான எரிசக்தி பரிவர்த்தனைகள் அரசியலாக்கப்படக் கூடாது" என இந்தியா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலில் பின்லாந்து மீண்டும் முதலிடம்

## 136 ஆவது இடத்தில் இந்தியா



உலகின் மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலில் 4 ஆவது முறையாக பின்லாந்து முதலிடம் பிடித்துள்ளது.

உலகின் மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியல் கடந்த 2002 ஆம் ஆண்டு முதல் ஐ.நாவின் நீடித்த வளர்ச்சிக்கான தீர்வு வலையமைப்பு ஆய்வுசெய்து பட்டியலிடுகின்றது. இதில் 149 நாடுகள் கணக்கெடுப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டு பட்டியலிடப்படுகின்றன. இம்முறை 146 நாடுகள் இதில் இடம்பெற்றன. இதில் 55.5 லட்சம் மக்கள் தொகை கொண்ட பின்லாந்து 7.842 புள்ளி களுடன் தொடர்ந்து 4 ஆவது ஆண்டாகவும் முதலிடத்தில் உள்ளது. அதனைத் தொடர்ந்து டென்மார்க், சுவிற்ஸர்லாந்து, ஐஸ்லாந்து, நெதர்லாந்து, நோர்வே மற்றும் சுவீடன் ஆகிய நாடுகள் காணப்படுகின்றன. இந்தப் பட்டியலில் அமெரிக்க 16ஆவது இடத்திலும் ஐரோப்பிய நாடுகளான பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகியவை 15ஆவது மற்றும் 20ஆவது இடத்திலும் உள்ளன. அத்துடன் இந்தியா 136ஆவது இடத்திலும் பாகிஸ்தான் 103 ஆவது இடத்திலும் இலங்கை 126ஆவது இடத்திலும் உள்ளன. (ச-இ)



இங்கிலாந்தின் வடக்குப் பகுதியில் உள்ள ஒரு பண்ணை ஒன்றில் ஐந்து கால்களுடன் ஆட்டுக்குட்டி ஒன்று பிறந்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோடி - ஜப்பான் பிரதமர் சந்திப்பு

புதுடில்லி, மார்ச் 21

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை ஜப்பான் பிரதமர் பியுமியோ கிஷிடா நேற்றுமுன்தினம் புதுடில்லியில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

ஜப்பான் பிரதமர் இரண்டு நாள் பயணமாக நேற்றுமுன்தினம் இந்தியாவுக்குச் சென்றுள்ளார். அவரை டில்லி விமான நிலையத்தில் இந்திய மத்திய அமைச்சர் வரவேற்றார்.

அதைத் தொடர்ந்து டில்லியில் உள்ள ஹைதராபாத் இல்லத்தில் பிரதமர் நரேந்திர மோடியை பியுமியோ கிஷிடா நேற்றுமுன்தினம் மாலை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின்போது, இரு நாடுகளின் நல்லுறவு, வர்த்தகம் குறித்து விரிவாக ஆலோசனை நடத்தினர். சந்திப்பின் பின் இந்தியாவில் 4 ஆயிரத்து 200 கோடி ரூபா டொலர் முதலீடு செய்யவுள்ளதாக ஜப்பான் பிரதமர் அறிவித்துள்ளார். (ச-இ)



மல்லாவி - அனிஞ்சியன்குளம் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் இருந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 15 பேர் சித்தியடைந்துள்ளனர். (ம-14,19)





மன்னார், தாழ்வுபாடு புனித சூசையப்பர் ஆலய வருடாந்த திருவிழாத் திருப்பலி நேற்றுமுன்தினம் காலை 7 மணியளவில் இடம்பெற்றது. அருட்தந்தை எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார் தலைமையில் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார் மற்றும் அருட்தந்தையர்கள் இணைந்து திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர். திருப்பலியை தொடர்ந்து திருச்சொரூப பவனியும், ஆசியும் இடம்பெற்றது. (ம-14,56)



வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாலயத்தில், வன்னிகோப் அவுஸ்திரேலியா, ரட்ணம் பவுண்டேசன் - லண்டன் நிதிப்பங்களிப்புடன் நிறுவப்பட்ட திறன் வகுப்பறை அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. (ம-14)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சின்னத்தம்பி சுப்பிரமணியம் — அமரர் சுப்பிரமணியம் றோசம்மா

எமது குடும்பத் தலைவர், தலைவியின்
முதலாம் ஆண்டு நினைவு ஆத்ம சாந்திப்பிரார்த்தனை நிகழ்வு
இன்று (21.03.2022) திங்கட்கிழமை காலை 09.00 மணியளவில்
எமது இல்லத்தில் நடைபெறும்.
அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து
ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும்
மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும்
வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

குடும்பத்தினர்

(cs 42815) (2.6)


## சண்டிஹோம பெருவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 21

ஏழாலைதெற்கு, களபாவோடை வசந்த நாகபூஷணி அம்பாள் திருக்கோயில் மஹா சண்டிஹோம பெருவிழா, எதிர்வரும் 30ஆம் திகதி காலை 7 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு மஹா சண்டிஹோம கலசாபிஷேகம் இடம்பெறும் என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ம-14)

## தவக்காலச் சிந்தனை

### குடும்பம் சமூகத்தின் ஆணிவேர்

திருமணமான பெண்களே உங்கள் கணவருக்குப் பணிந்திருங்கள். ஆண்டவரைச் சார்ந்து வாழ்வோருக்கு இதுவே தகும். திருமணமான ஆண்களே உங்கள் மனைவியிடம் அன்பு செலுத்துங்கள். அவர்களைக் கொடுமைப்படுத்தாதீர்கள். பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்கு முற்றிலும் கீழ்ப்படியுங்கள். ஆண்டவரைச் சார்ந்தவர்களுக்கு இதுவே தகும் (1 கொலோ. 3:18-20)

குடும்பம் சமூகத்தின் ஆணிவேர். சமூக கட்டமைப்பின் அடித்தளமான குடும்பம் இன்று பல்வேறு காரணங்களால் ஆட்டம் கண்டு தான்தோன்றித்தனமாக தறிகெட்ட வாழ்க்கையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. கடவுள் முன்னிலையில் இன்பத்திலும் துன்பத்திலும் உடல்நலத்திலும் நோயிலும் உயர்விலும் தாழ்விலும் சமபங்கேற்போம் என்ற திருமண வாக்குறுதியை புறந்தள்ளி, உறவு விரிசல்களிலும் மண முறிவிலும் விவாகரத்திலும் பல குடும்பங்கள் சிதைந்து போகின்றன.

களங்கமற்ற பரஸ்பர அன்பும் புரிந்துணர்வும் வெளிப்படைத் தன்மையும் விட்டுக்கொடுப்பும் கடமையுணர்வும் இறை நம்பிக்கையும் வளமான குடும்பத்தைக் கட்டியெழுப்பும் பலமான தூண்களாகும். குடும்பத்தில் ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் குறைந்தவரல்லர். இணைந்து பயணிக்கும் சக்கரங்கள் ஒன்றோடொன்று ஒத்திசைவாக இயங்கினால் வாழ்வென்றும் தேர் அழகாக உருளும். இறைவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும் என்பதை எந்நேரமும் நினைவில்கொள்வோம்.

யே.சுபீட்ச...
காழும்புத்து...





வட்டுக்கோட்டை சங்கரத்தை பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் இரதோற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. (ம-14,125)

## கூட்டுறவுச்சங்க கட்டடத்திறப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 21

வலி.கிழக்கு, நீர்வேலி வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச்சங்க புதிய கட்டடத் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது.

சங்கத்தின் தலைவர் ந.சிவகுமாரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.சந்திரசேகரன், சிறப்பு விருந்தினராக வலி.கிழக்கு பிரதேசசபைத் தவிசாளர் தி.நிரோஷ், சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் க.கமலநாதன், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் க.பரநிரூபன், நீர்வேலி வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ம-14,159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சுழிபுரம் பத்திரகாளியம்மனின் பங்குனிப் பெரும் பொங்கல்

துரை கணேசமூர்த்தி

"ஆயிரம் வடிவுடையா யன்னையே பத்திரகாளி – எமக்கு ஆதாரம் நீயல்லாம் வேறு கதியேதம்மா பாரினிலே"

இந்த அகிலத்தின் இயக்கத்துக்கும், உயிர்களின் இயக்கத்துக்கும் மூலகாரணியாக அமைவது சக்தி. சக்தி இல்லையேல் யாவும் சூனியமாகிவிடும். ஆதலால் சக்தியை முதன்மைப்ப டுத்தி வழிபாடியற்றும் மரபு பழந்தமிழர் வழக்காற்றுப் பாரம்பரியத்திலிருந்து உருவாகியது. இதனாலேயே அன்னை சக்தியை அகிலாண்டகோடி பிரமாண்டநாயகி என்றும் கூறுவர்.

இதனை தாயுமான சுவாமிகள்; 'அகிலாண்ட கோடி ஈன்ற அன்னையே பின்னையும் கன்னி என மறைபேசும்' என்று குறிப்பிடுகின்றார்.

மானிட வாழ்விலே அவரவர் பெற்றுய்யும் வரங்களுக்கும் அன்னையின் அருளாட்சியே காரணமாகின்றது. சம்பந்தப் பெருமானுக்கு ஞானம் கிடைத்ததும், அபிராமி பட்டர்பிரானுக்கு அருட்காட்சி கிடைத்ததும், காளிதாசனுக்கு கவியாற்றல் பெருகியதும் அன்னையின் அருளினாலேயே.

முடியுடை மூவேந்தர் முதற்கொண்ட மன்னர் யாவரும் சக்தியை கொற்றவைத் தெய்வமாக வழிபட்டு வெற்றிவாகை சூடினர். இந்தக் கொற்றவைத் தெய்வமே காலரூபிணியான பத்திரகாளித் தெய்வம் ஆவாள். இத்தகைய சக்தியான பத்திரகாளித் தாயினுடைய வழிபாட்டுக்குரிய சிறப்பான காலமாக பங்குனி மாதம் அமைகின்றது.

சூரியன் மத்திய கோட்டுக்கு மேலாக உச்சமடையும் பங்குனி மாதத்தில் இந்தத் தென்னாசியப் பிராந்தியத்தின் அமைவிடங்களிலெல்லாம் மிகையான வெப்பம் கிடைக்கின்றது. இதனால் பயிர்கள் பாதிப்படைவதோடு நீர்நிலைகள் வற்றி வறட்சியேற்படும். உயிர்களிடையே பலவித நோய் உபாதைகளும் ஏற்படும். இவற்றிலிருந்து மீள்வதற்காக காலரூபிணியான அம்பாளுக்கு பொங்கல் மடை, குளிர்த்தி, அபிஷேகம், உற்சவம் என்றெல்லாம் செய்யப்படும். இவ்வாறான வழிபாட்டு மரபிலே சுழிபுரம் பத்திரகாளி அம்பாளுடைய பங்குனிப் பொங்கல் உற்சவமும் அமைகின்றது.

'தொல்லுலகும் போற்றும் சுழிபுரம்' என்று பறாளாய் விநாயகர் பள்ளிலே சிறப்பித்துக் கூறப்படும் இவ்விடத்தில் சோழப் பெருங்குடியாரது செல்வாக்கு மேலோங்கியிருந்தால் 'சோழியபுரம்' என்றும் சுழிபுரம் அழைக்கப்படலாயிற்று. பலநூறு வருடங்களுக்கு முன்பு இவ்வூரின் கீழைத்திசைமுகமாயமைந்த பிராயஞ்சோலைகளுக்கும் பாற்கிளுவை விருட்சங்களுக்கும் மத்தியில் கம்மாளப் பிராமணர் மரபினராகிய சித்தரொருவர் தனது கம்மாலையில் வசித்து வந்தார். அவரது ஞானநிஷ்டையில் தோன்றிய அன்னை பத்திரகாளி தனது உற்சவத்துக்குரிய பாற்கிளுவை விருட்சத்தை ஒளிப் பிரவாகத்தினூடாக அவருக்கு உயர்த்தி தன்னை ஆதரித்து வரும்படியாக அருள்வாக்கைக் கொடுத்தார் என்று கூறப்படுகின்றது. அன்றிலிருந்து கம்மாளப் பிராமணரால் பூசை வழிபாடுகள் இயற்றப்பட்டதென்றும், நிவேதனமாக உவித்த அமுதும், அவித்த கறியும் படைத்து வழிபாடியற்றப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

இவ்வமுதும் கறியும் அடியார்க்கு பிரசாதமாக வழங்கிய போது அவை தீராத பிணியாவும், தீர்க்கின்ற மருந்தாக அமைந்தமையும் அன்னையின் அருளாட்சிக்கு சான்றாகும்.

அடியவர்கள் பொங்கியும், மடையிட்டும் உண்டும் தமது சுகநலன்களை அம்பாளிடமிருந்து பெருவரமாக பெற்றுக் கொள்கின்றனர். அன்னைக்குரிய பங்குனிப் பொங்கல் உற்சவத்தில் விளக்கு வைத்தல், பந்தற்கால் நாட்டுதல், முதலியன் பொங்கல், முதலாம் வேள்வி, ஏடுபிடித்தல், கெவுளியுரைத்தல், எட்டாம் மடை என்பன பாரம்பரியப் பெறுமானமுள்ள அற்புத நிகழ்வுகளாகும்.



# நேட்டோவின் கண்முன் சரணடையும் உக்ரைன்

பைஷல் இஸ்மாயில்

உக்ரைன் – ரஷ்யா போர் தற்போது நான்கு வாரங்களை அண்மித்துள்ளது. தற்போதும் போர் நடைபெறுகிறது. உயிரணு ஆயுதங்கள், இரசாயன ஆயுதங்கள் தொடர்பில் கலந்துரையாடல் நடைபெறுகின்றது. உண்மையில் போரில் இருப்பது குரோதம். குரோதம் இருக்கக்கூடிய போர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நியாயத்தை உண்டுபண்ணாது. உக்ரைனும் ரஷ்யாவும் பரஸ்பரம் போர்க்குற்றச்சாட்டுக்களை எதிரெதிர் தரப்புக்களிடம் முன்வைத்துள்ளன.

போர் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் கருத்து முரண்பாடு தீவிரமடைந்த காலத்திலும் கிழக்கு உக்ரைனின் இரு மாவட்டங்களை சுயாதீன இராஜ்ஜியமாக ஏற்றுக்கொண்ட சந்தர்ப்பத்திலும், அவற்றைப் பாதுகாப்பதற்காக ரஷ்ய இராணுவத்தை அனுப்பிய சந்தர்ப்பத்திலும் புடினுக்கு சர்வதேச ரீதியாக ஒரு வரவேற்பு இருக்கவே செய்தது. ஆனால், உக்ரைனை ஆக்கிரமிக்க வழங்கிய ஆணையை அடுத்து புடினின் ஆதரவு கொஞ்சம் வீழ்ச்சியடைந்தது. இதற்கு முக்கிய காரணம் போரின் தோற்றத்துக்கான காரணத்தை விடுத்து போரின் விளைவுகளை மட்டும் மேற்கத்திய ஊடகங்கள் கதைத்துக் கொண்டிருப்பதுமாகும். மேற்கத்திய ஊடகங்கள் ஷெலன்ஸ்கியை வீரனாகக் காட்டின. அது மிகைப்படுத்தப்பட்ட தன்மை கொண்டதாகும். உண்மையில் வீரனாக வருவதற்கு ஷெலன்ஸ்கி எந்தவொரு விடயத்தையும் செய்யவில்லை. அதேநேரம் சில சந்தர்ப்பங்களில் ஷெலன்ஸ்கி துணிச்சலான தீர்மானங்களை எடுத்தார். இருப்பினும் தீர்மானம் எடுக்கப்பட்டது போர் ஆரம்பிக்கப்பட்ட பின்னர். ஆனால், ஒட்டுமொத்த பொறிமுறையின் உள்ளே அவர் தோல்வியடைந்துள்ளார். தற்போது ரஷ்யா- உக்ரைன் தொடர்பில் மத்தியஸ்தமான கருத்து வெளியில் வந்துள்ளது. அதற்கேற்ப அந்தப் போரின் முதலாவது குற்றவாளியாக அமைவது ஷெலன்ஸ்கியே. இரண்டாவது குற்றவாளி அமெரிக்கா உட்பட நேட்டோ, மூன்றாவதுதான் புடின்.

ரஷ்ய இராணுவத்தினர் தற்போது கீவ் நகரைச் சுற்றி வளைத்திருக்கின்றார்கள். மூன்று பக்கத்தாலும் நகரத்துக்குள் உள்நுழைவதற்கான சந்தர்ப்பம் காணப்படுகின்றது. இனி கீவ் நகரைப் பாதுகாப்பதற்கு உச்ச நடவடிக்கைகள் எடுக்கப்படும். உண்மையில் இனித்தான் இரண்டு பக்கத்திலும் பெரும் அழிவுகள் ஏற்படும். விசேடமாக ரஷ்யா உயர்ந்த பட்சமாக விமானத் தாக்குதலை மேற்கொள்ளலாம். உக்ரை[illegible] வரும் [illegible] இனங்கண்டு தாக்கத் தொடங்கியிருக்கின்றது ரஷ்யா. அடுத்ததாக மேற்கத்திய எல்லையருகே அல்லது நேட்டோ எல்லைக்கு மரண பீதியை கொண்டு சென்றுள்ளார்கள். உண்மையில் இந்த இடத்தில் போலந்து எல்லையில் தாக்குதல் நடைபெறுமாக இருந்தால் நிலைமை மேலும் மோசமடையும். தற்போது ஒரு விடயம் வெளிப்படையாகத் தெரிகின்றது. தற்போது உக்ரைன் முழுவதுமே பாதுகாப்பற்றதாகக் காணப்படுகின்றது. கீவ் நகரம் வீழ்ந்ததும் அனைத்து விடயங்களும் முடிவடைந்து விடும். அது தான் இரண்டு பக்கத்தினதும் நோக்கமாகக் காணப்படுகின்றது. உக்ரைன் அதிகாரிகளின் கருத்துக்களூடே அவர்களது தோல்வி குறித்து வெளியாகின்றது.

அவர்களது கருத்துக்களைப் பகுப்பாய்வு செய்து பார்த்தால் அதனை தெளிவாகக் காணக்கூடியதாக உள்ளது. அதேநேரம் எந்த இழப்பைச் சந்தித்தாலும் கீவை கைப்பற்றாமல் விடுவதில்லை என்பதில் ரஷ்ய இராணுவம் உறுதியாக உள்ளது. ஷெலன்ஸ்கியை தற்போது ஐரோப்பிய ஒன்றியமும் கைவிட்டுவிட்டது. நேட்டோவும் கைவிட்டுவிட்டது. மேற்குறித்த இரு தரப்புகளின் உச்சபட்சத் தலையீடுகளும் இப்போதெல்லாம் ஷெலன்ஸ்கியின் காணொலிகளைக் கண்டு கரவொலி எழுப்புவதாகவே ஆகிவிட்டது. ஷெலன்ஸ்கியையும் உக்ரைனையும் பலியெடுப்பதற்கான கரவொலிகளே அவை. ஷெலன்ஸ்கிக்கு இன்னும் சிறிய சந்தர்ப்பம் இங்கு காணப்படுகின்றது. இதனை இராஜதந்திர அடிப்படையில் தீர்த்து வைப்பது நல்லது. அதாவது ரஷ்யாவுக்கு தேவையான உறுதிமொழியை வழங்குவது. ஆனால் ஷெலன்ஸ்கி அதைச் செய்வதற்குத் தயாரில்லை. மேற்கத்திய ஆயுதங்களைப் பயன்படுத்தி ரஷ்ய இராணுவத்தை தோல்வியடையச் செய்ய முடியும் என்று உக்ரைன் நம்பிக்கை கொள்ளமுடியாது. தங்களுடைய நாட்டு மக்களுடைய உயிரை மீண்டும் பலிகொடுப்பதா? இல்லையா? என தற்போது நினைக்கவேண்டும். அவ்வாறு இல்லை என்றால் கீவ் வீழ்ந்த பின்னர் கீழ்ப்படிதலை அறிவிக்கவேண்டி ஏற்படும். இருப்பினும் அதைச் செய்வதற்கு முன்னர் ஷெலன்ஸ்கி என்ற ஒருவர் இருப்பாரோ இல்லையோ தெரியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணம் அச்சிடுதலை நிறுத்த வேண்டும்!

## அரச தரப்பு அமைச்சர் ஆலோசனை

**கொழும்பு, மார்ச் 21**

**நாட்டில் பணம் அச்சிடுவதை உடனடியாகக் குறைக்க வேண்டும். இல்லாவிடில், பொருளாதாரம் மிகவும் மோசமான நிலைமைக்குச் செல்லும் என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்:
நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியில், இதுபோன்ற பொருளாதார விஞ்ஞானம் தொடர்பில் போதிய புரிதல் இல்லாத மிகவும் பலவீனமான நாடாளுமன்றை நான் கண்டதில்லை.
பணத்தை அச்சிட்டு வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறுவோர் மத்தியில் ஏன் பகிர்ந்தளிக்கக் கூடாது என்று கூறும் நபர்களும் நாடாளுமன்றில் இருக்கின்றனர்.
அப்படிச் செய்தால், நாட்டின் முழுப் பொருளாதாரம் மிகவும் மோசமான நிலைமைக்குச் செல்லும் என்பது இவர்களுக்குப் புரியவில்லை.
இந்த நிலைமையைப் புரிந்து கொண்டு பணம் அச்சிடுவதைக் கட்டுப்படுத்த நாடாளுமன்றம் தலையிட வேண்டும் -என்றார்.
இலங்கை மத்திய வங்கி குறுகிய காலத்தில் சுமார் இரண்டு பில்லியன் ரூபா பெறுமதியான நாணயங்களை அச்சிட்டுள்ளது.
இதன் காரணமாக நாட்டின் பணவீக்கம் அதிகரித்து, பொருள்களின் விலை பல மடங்காக அதிகரித்துள்ளது என்று பொருளியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம-4-இ)

## பசிலுக்கு ஆதரவாக அரச தரப்பு பிரேரணை

கொழும்பு, மார்ச் 21
நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவுக்கு ஆதரவாக, நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணையைக் கொண்டு வருவதற்கு நாம் தயார் என்று அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்துள்ளார்.
பஸில் ராஜபக்சவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படும் என்று எதிரணி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.
பஸில் நாட்டுக்காகப் பாடுபடுபவர். தற்போதைய நெருக்கடி நிலைமையைச் சமாளிப்பதற்கு அவர் பாடுபட்டுக்கொண்டிருக்கின்றார். பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்பதே அவரின் இலக்கு. இந்த நிலையில், அவரின் பயணத்தைக் குழப்புவதற்கு சிலர் முற்படுகின்றனர். எனவே, நிதி அமைச்சருக்கு நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணையே கொண்டு வரப்பட வேண்டும். அதனைக் கொண்டு வருவதற்கு நாம் தயார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4-இ)

## இயற்கையை வஞ்சிப்பதாலேயே மனிதனுக்கு பல்வேறு அழிவுகள்!

### பிரதமர் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 21
மனிதன் தனது முன்னேற்றத்துக்காக இயற்கைக்கு செய்துள்ள கேடு கொஞ்ச நஞ்சமல்ல. அதனால் தான் இயற்கை அவ்வப்போது மக்களுக்கு பல்வேறு அச்சுறுத்தல்களையும், தடைகளையும் ஏற்படுத்துகின்றது. இவற்றில் இருந்து விடுபட இயற்கையை நாம் நேசிக்க வேண்டும் -இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
நாமல் சர்வதேச சுற்றாடல் அமைப்பின் அங்குரார்ப்பண நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;
நாமல் தேசியப் பூங்கா போன்றதொரு பெறுமதி மிக்க பாரம்பரியம் எமது தாயகத்தில் இருப்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைய வேண்டும்.
சுமார் 2 ஆயிரம் ஏக்கர் இந்த நிலப்பரப்பில் தேவநம்பியதிஸ்ஸ மன்னன் காலத்து இடிபாடுகள்கூட காணப்படுகின்றன.
இந்தப் பூங்காவில் நமது தேசிய மரமான நாகமரம் தவிர, சுமார் 18 வகையான பறவைகள் மற்றும் 72 மருத்துவத் தாவரங்கள் உள்ளன. இதைப் போன்று எமது நாட்டில் பல்லுயிர் பெருக்கம் கொண்ட மிக முக்கியமான சுற்றுச்சூழல் மண்டலங்கள் உள்ளன. அவை பாதுகாக்கப்பட வேண்டியவை. தொல்பொருள் மற்றும் சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்தவை -என்றார். (ம-4-இ)



## பெரமுனவின் மேதினம் காலியில்

கொழும்பு, மார்ச் 21
பொதுஜன முன்னணியின் மேதினக் கூட்டத்தை, காலி முகத்திடலில் நடத்துவதற்கு, கட்சியின் ஸ்தாபகரான நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச தீர்மானித்துள்ளார்.
இதற்காக காலிமுகத்திடல் முன்கூட்டியே பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தத் தகவல் கொழும்பு மாநகர சபைக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.
மேதினக் கூட்டத்துடன் பொதுஜன முன்னணியின் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான பரப்புரை நடவடிக்கையும் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-4-இ)

## மூத்த பிரஜை நிலையான வைப்பு வைத்திருப்போருக்கு அறிவித்தல்

கொழும்பு, மார்ச் 21
மூத்த பிரஜைகளுக்கான விசேட உயர் வட்டி வீதத் திட்டத்தில் நிலையான வைப்புக்களை வைத்திருப்போர் நேரில் தோன்றியோ, எழுத்து மூலமோ திட்டத்தை நீடித்துக் கொள்வது கட்டாயம் என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.
அவ்வாறு நிலையான வைப்புகளைக் நீடிக்கத் தவறினால், அவர்களின் நிலையான வைப்பு மூத்த பிரஜைகளுக்கான விசேட உயர் வட்டி வீதத் திட்டத்தில் இருந்து, சாதாரண நிலையான வைப்புக் கணக்குகளாக மாற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் முதிர்ச்சியடையும் வகையில் இத்தகைய நிலையான வைப்புக்களை வைத்திருந்தால், எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் வங்கிக்கு நேரில் சென்றோ அல்லது எழுத்துமூலமாகவோ கணக்கை நீடிக்கும் வேண்டுகோளை விடுக்க வேண்டும் என்று இலங்கை மத்திய வங்கி அறிவுறுத்தியுள்ளது. இதுவரை காலமும் நடைமுறையில் இருந்த நிலையான வைப்புக்கள் சுயமாகப் புதுப்பிக்கப்படும் நடைமுறை இனிமேல் இருக்காது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.
மூத்த பிரஜைகளுக்கான விசேட உயர் வட்டி வீதத் திட்டத்தில் உள்ள நிலையான வைப்புகளுக்கு 15 வீத வட்டி வழங்கப்படுகின்றது. சாதாரண நிலையான வைப்புகளுக்கு 6 முதல் 7 வீத வட்டியே வழங்கப்படும். (எ-ரி)



'தமிழ்த் தேசியப் பசுமை' இயக்கத்தால், கோண்டாவில் தில்லையம்பதி சிவகாமி அம்பாள் திருமண மண்டபத்தில் குருதிக்கொடை முகாம் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. இதில் பங்கேற்ற அனைவருக்கும் பூச்செடிகள் வழங்கப்பட்டன. (ம-4.இ)

## வனங்களை பாதுகாப்பதற்கு நாடளாவிய திட்டங்கள்

கொழும்பு, மார்ச் 21
சர்வதேச வனங்கள் தினம் இன்று கொண்டாடப்படவுள்ள நிலையில் 'வனங்களும் நிலைதகு உற்பத்தியும் நுகர்வும்' எனும் தொனிப்பொருளில் இந்த வருடம் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன..
இது குறித்து சுற்றாடல் நீதிக்கான மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் மூத்த மதியுரையாளருமான ஹேமந்த விதானகே தெரிவிக்கையில்;
வனங்களில் மிக முக்கியமான நீரேந்து பகுதிகளும் மனிதர்கள் தவிர்ந்த ஏனைய விலங்குகளுக்கான வாழிடமும் உள்ளன. மேலும் உணவு, பழங்கள், மருந்து வகைகள், விறகு மற்றும் வெட்டு மரங்கள் என்பவையும் எமக்குக் கிடைக்கின்றன. வனங்களானவை மனிதர்கள் நினைத்தவாறு சுரண்டக்கூடிய முடிவற்ற மூலவளங்கள் அல்ல. மூலவளங்களான காடுகளை அடியோடு இல்லாமலாக்கும் நிலைக்கு இட்டுச் செல்லும் மனிதர்கள் வளங்களைப் பாதிக்காத நிலைதகு வகையில் அவற்றைப் பாதுகாக்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் -என்றார். (சு-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசிய கிரிக்கெட் சபையின் தலைவரும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் பிரதம செயலாளருமான ஜே ஷா ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை அவரது அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்தார். இந்தச் சந்திப்பில் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ச, இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் ஷம்மி சில்வா மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி எஷ்லி டி சில்வா ஆகியோரும் கலந்துகொண்டனர். (வ-இ)



கிளிநொச்சி மாவட்ட மகா சக்தி மகளிர் சம்மேளனத்தின் மகளிர் தின நிகழ்வு கிளிநொச்சி மகா சக்தி மகளிர் சம்மேளன வளாகத்தில் அண்மையில் இடம்பெற்றது. சம்மேளனத் தலைவர் சிவகுமார் மலர்ச்செல்வி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். (ம-14,316,113)

## மரண அறிவித்தல்

தோற்றம் 06 - 07 - 1939



மறைவு 19 - 03 - 2022

### சின்னத்தம்பி செல்வரத்தினம் (சரவணமுத்து)

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்- நீர்ப்பாசனத்திணைக்களம்)

மாமூலை, முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும், வாளித்தொழிற்சாலை ஒழுங்கை, மாவிட்டபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி செல்வரத்தினம் (சரவணமுத்து) நேற்று முன்தினம் (19.03.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி நாகம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற கந்தையா சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், வசந்தாதேவியின் பாசமிகு கணவரும், சுதன் (கனடா), லதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜபூபதி, மல்லிகாவதி, இராஜரட்ணம், புனிதவதி, விஜயரட்ணம், நவரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தற்பரா, சயந்தினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பிரணவன், சுரேன், சகானா, மதுசன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2022) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மாவிட்டபுரம் தச்சன் காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வாளித்தொழிற்சாலை
ஒழுங்கை
மாவிட்டபுரம்.

தகவல் :
குடும்பத்தினர்
077 211 7842

## மரண அறிவித்தல்



### திருமதி நல்லம்மா சுப்பிரமணியம்

கோப்பாய் வடக்கு கலம்பரையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (20.03.2022) ஞாயிற்றுக் கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கைலாயர் சின்னத்தங்கம் தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து கதிராசி தம்பதிகளின் மருமகளும், சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், சதானந்தன் (வருமான பரிசோதகர், யாழ் மாநகரசபை), விமலானந்தன் (Mechanic), கிருபானந்தன் (அஞ்சல் உதவியாளர், தபால் அலுவலகம், கோப்பாய்), சண்முகானந்தன், குகானந்தி, சாங்கர் ஆகியோரின் பாசமிகு தாயாரும், திருமதி மங்களேஸ்வரி சிவயோகநாதன் (ஆசிரியர் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி) ஆகியோரின் சிறியதாயாரும், சுதர்சினி, பாலேஸ்வரி, கோமதி (பிராந்திய கணக்கீட்டு காரியாலயம், தபாலகம்), கீதாஞ்சலி, அன்பழகன், தர்சிகா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சிவதர்சன், கீர்த்தனி, டிஷாங்கினி, ஸ்ரீவர்சினி, பிரியங்கா, யுகப்பிரியன், நோஷிகா, சனோஷிகன், வருண், ஷர்மிகா, சுஜனஸ்ரீஷாயன், சிவானந்தி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2022) திங்கட்கிழமை கோப்பாய் வடக்கில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 1.00 மணியளவில் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS 18965) (4/6)

தகவல்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



திருமதி
### கணபதிப்பிள்ளை பரமேஸ்வரி

மீசாலை கிழக்கு , மீசாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை பரமேஸ்வரி நேற்று (20.03.2022) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மஞ்சுளா, மைதிலி ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவராஜா (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் யாழ் போதனா வைத்தியசாலை) (கனடா), புஸ்பராசா ஆகியோரின் அன்பு மாமியாரும், அபர்ணா-துவாரகேதன் (கனடா), அபர்ணன்-சதுர்சிகா (லண்டன்), கோபிகா (அட்டாளைச்சேனை, கல்வியற்கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியும், வர்ணிகா, ஆருத்ரா, திகழினி ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2022) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை கிழக்கு,
மீசாலை

(CS 18968) (4/6)

தகவல்
குடும்பத்தினர்
மகள்:- 077 693 6044

## மரண அறிவித்தல்

பிறப்பு 26.12.1958



இறப்பு 19.03.2022

### அந்தோனிப்பிள்ளை அன்ரன் அன்பழகன்

(ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் - கிளிநொச்சி கல்வி வலயம்)

கிளிநொச்சி உருத்திரபுரத்தைப் பிறப்பிடமாகவும் பெரியபளை, பளையை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை அன்ரன் அன்பழகன் (ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் - கிளிநொச்சி கல்வி வலயம்) நேற்றுமுன்தினம் (19.03.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை- டெய்சி(இளைப்பாறிய குடும்பநல அலுவலர்) தம்பதியரின் அன்பு மகனும், யூடிற் திரிஷாவின் அன்புச் சகோதரனும், பரமேஸ்வரி(இளைப்பாறிய ஆசிரியை- பளைஇந்து ஆரம்ப வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும், ஸ்ரீபன் சன்சிகன்(சுயாதீன ஊடகவியலாளர்), அமலதர்சிகன்(ஆசிரிய பயிலுனர்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், கிருத்திகா(நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அலுவலர்- கிளிநொச்சி) அவர்களின் பாசமிகு மாமனாரும், ஆதிரனின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதி நிகழ்வுகள் இன்று (21.03.2022) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிக்கு புலோப்பளை புனித இராயப்பர் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு இராயப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரியபளை, பளை
077 900 9595

(ச.37689) (2-6)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மட்டுவிலில் நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.












## போருக்கு...

இருந்தது என்பது எனக்கு நினைவிருக்கிறது. அப்போது யாழ்ப்பாண மக்களுக்கும் கொழும்பு மக்களுக்கும் இடையே சிறந்த தொடர்பு இருந்தது. யாழ்ப்பாணத்தில் சிங்கள முதலாளிமார் இருந்தார்கள். இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசின் காலத்தில் தேசிய நல்லிணக்க அமைச்சு ஊடாக நிதி ஒதுக்கப்பட்டு கட்டப்பட்ட மட்டுவில் பொருளாதார மத்திய நிலையத்தை பிரதமர் மஹிந்த ராஜபக்ச நேற்றுத் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-



**நெருக்கமாக இருந்தோம்**

இங்கிருந்த பெரும்பாலான தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அப்போது கொழும்பில் இருந்தனர். இன்றும் அப்படித்தான். யாழ்ப்பாணத்திலிருந்து ரயிலிலே கொழும்பு வந்துசென்றனர். கொழும்பில் பணிபுரியும் அரச பணியாளர்கள் வெள்ளிக்கிழமை மாலை ரயிலில் ஏறி காலையில் யாழ்ப்பாணத்தை சென்றடைவர். அது ஒரு காலம். அந்தக் காலத்தில் யாழ்ப்பாணம் எங்களுக்கு வெகு தொலைவில் இல்லை. மிக நெருக்கமாக உணர்ந்தோம்.

அந்த சகாப்தம் 1980 க்குப் பின்னர் திடீரென மறைந்தது. யாழ்ப்பாணம் செல்லும் ரயில் பாதையை உடைத்தனர். தெற்கிலிருந்து வடக்கு நோக்கியும் வடக்கிலிருந்து தெற்கு நோக்கியும் செல்ல வேண்டிய யாழ்தேவி நின்றது. வடக்கையும் தெற்கையும் இணைக்கும் பண்பாட்டுப் பாலமாக யாழ்தேவியைப் பார்க்கிறேன்.

**சொந்த மண்ணில் வாழும் உரிமை இல்லை**

வடக்கு மக்கள் சுதந்திரத்தை இழக்க ஆரம்பித்தனர். வடக்கில் விவசாயி நெல் வயலுக்குச் செல்ல முடியவில்லை. மீனவர்கள் கடலுக்குச் செல்ல முடியவில்லை. வடக்கு பதுங்கு குழியாக மாறியது. சொந்த மண்ணில் சுதந்திரமாக வாழும் உரிமையை இழந்தனர். எந்த நேரத்திலும் தமது சொந்த வீடுகளைவிட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலை உருவானது. வடக்கில் உள்ள மக்கள் அகதிகளாக பல்வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டியிருந்தது. ஆரம்ப காலத்தில் இந்தியாவுக்குச் சென்றனர். ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்றனர். அவர்களுக்கு தாயகம் இருந்தாலும் அங்கு சுதந்திரமாக வாழமுடியாமல், தெரியாத பிரதேசங்களிலும், நாடுகளிலும் அகதிகளாக வாழ வேண்டியதாயிற்று.

**அனைத்தையும் வழங்கினேன்**

30 ஆண்டுகளாக அந்த இருண்ட சகாப்தம் இருந்தது. அந்த இருண்டகாலத்தில் வடக்கு மக்களின் வாழ்வுரிமையும் அபிவிருத்தியும் பறிக்கப்பட்டன. 2019ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி அந்த இருண்ட சகாப்தத்தை முடிவுக்குக் கொண்டுவர முடிந்தது. அதன் பின்னர் வடக்கு மக்கள் இழந்த உயிர்களைத் தவிர அனைத்தையும் வழங்க நடவடிக்கை எடுத்தோம்.

போர் முடிவடையும்போது இன்று வடக்கில் உள்ள எதையும் அன்று காணமுடியவில்லை. இடிந்த கட்டடங்கள், உடைந்த சாலைகள், வீடற்ற மக்கள் இவையே அன்றைய நிலை. ஆனால் ஓரிரு வருடங்களில் அனைத்தையும் திருப்பிக் கொடுத்தோம். சாலைகள் அமைக்கப்பட்டன, தண்ணீர் வழங்கப்பட்டன, பல்லாயிரக்கணக்கான கண்ணிவெடிகள் அகற்றப்பட்டன. மின்னல் வேகத்தில் மின்சாரம் கொடுக்கப்பட்டது என்று சொல்வதே சரியாக இருக்கும். பாடசாலைகள், மருத்துவமனைகள், இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் கட்டப்பட்டன.

**வடக்கும் தெற்கும் இணைந்தன**

அன்று வடக்கு மக்கள் சாப்பிடுவதற்கும், பல் துலக்குவதற்கும் மட்டுமே வாய் திறக்கிறார்கள் என்ற கதை காணப்பட்டது. அந்த மக்களை நாம் விடுவித்தோம். பல ஆண்டுகள் கழித்து ரயில் பாதை அமைக்கப்பட்டது. வடக்கும் தெற்கும் யாழ்தேவியால் இணைக்கப்பட்டன. வடக்கில் மாகாண சபை மீண்டும் உருவாக்கப்பட்டது. ஆனால் அந்த சகாப்தத்துக்கு 2015 இல் இடையூறு ஏற்பட்டது. 2015 இன் பின்னர் நாங்கள் செய்த வேலைகள் இடைநிறுத்தப்பட்டன. நல்லிணக்கம் என்ற திட்டம் வந்தது.

அவசரகாலச் சட்டங்களை நீக்கி நாம் ஏற்படுத்திய மாகாண சபை நல்லாட்சியுடன் கலைக்கப்பட்டது. நல்லாட்சி காலத்தில் ஒரு வீதி அபிவிருத்தியோ அல்லது மின்சாரத் திட்டமோ யாழ்ப்பாணத்துக்கு கிடைக்கவில்லை. நாட்டுக்கும் கிடைக்கவில்லை. புதிய மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டிருந்தால் யாழ்ப்பாண மக்கள் இன்று இருளில் மூழ்கியிருக்கமாட்டார்கள்.

ஆனால் நல்லிணக்கத் திட்டத்துக்காக பல பில்லியன்கள் செலவிடப்பட்டன. சமாதானம் பற்றிய பாடலுக்கும் பில்லியன்கள் செலவழிக்கப்பட்டன. ஆனால் யாழ்ப்பாண மக்களுக்கு ஒரு குடிதண்ணீர்க் குழாய் வழங்கப்படவில்லை.

**கொரோனா கெடுத்துவிட்டது**

நாங்கள் செய்து கொண்டிருந்த பணி 2015 இல் நிறுத்தப்பட்டது. நாம் அதை மீண்டும் தொடங்க வேண்டும். 2019 ஆம் ஆண்டு மீண்டும் இந்த நாட்டைக் கைப்பற்றியபோது, நல்லாட்சியின் மூலம் பின்னோக்கிச் சென்ற நாட்டை மீண்டும் கட்டியெழுப்பத் திட்டமிட்டோம். ஆனால் திடீரென்று கொரோனாத் தொற்று ஏற்பட்டது. அந்த நேரத்தில் பொறுப்புள்ள அரசு என்ற வகையில் நாங்கள் எமது மக்களைப் பாதுகாக்கவே விரும்பினோம். நாம் அதைச் செய்தோம். வடக்கு மக்களைப் போன்று தென்னிலங்கை மக்களையும் தொற்று நோயிலிருந்து பாதுகாக்க முடிந்தது.

உங்கள் மாகாணங்களில் 2015ஆம் ஆண்டுக்குப் பின்னர் இடைநிறுத்தப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளையும், மக்களின் வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளையும் ஆரம்பிப்போம் என உறுதியளிக்கின்றோம். உங்கள் அனைவருக்கும் சிறந்த எதிர்காலம் அமையப் பிரார்த்திக்கிறேன்-என்றார். இதன் பின்னர் தமிழில், "நாம் உங்களை மறக்கமாட்டோம், கைவிடமாட்டோம் " -என்றும் பிரதமர் தெரிவித்தார் என்று, பிரதமரின் ஊடகப் பிரிவு அனுப்பிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்

Congratulations

திருமதி
நிரஞ்சனாதேவி கிருபாகரன்
(SLTS - 1)
பகுதித்தலைவர்



**சேவை விபரம்**

- யா / யாழ். இந்து ஆரம்ப பாடசாலை 1990.03.26 - 2010.05.09
- யா/ ஆனைப்பந்தி மெ.மி.த.க. பாடசாலை 2010.05.10 - 2011.09.18
- யா / யாழ் இந்து ஆரம்ப பாடசாலை 2011.09.19 - 2022.03.21

முத்தமிழால் இசை பாடி இந்து ஆரம்ப
- அன்னைக்குபுகழ் சேர்த்த
எங்கள் மணிவிழா நாயகியாம்
- நிரஞ்சனா கிருபாகரன்
அவர்களை வாழ்த்துகின்றோம் வாழ்க
- வாழ்கவென்று

தேன்தமிழால் இசைபாடி தேசியம்வரை
- வென்று வந்தீர்
வார்த்தைகள் போதாதம்மா உங்கள்
- சேவைகள் செப்பிடவே
ஆனாலும் வாழ்த்துகின்றோம் வாழ்க
- நீங்கள் வளமுடன்

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/ யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.





**வீடு வாடகைக்கு தேவை**

யாழ். நகர்/ நல்லூர்/ கச்சேரி/ அரியாலை போன்ற பகுதிகளில் வீடு வாடகைக்கு தேவை. (CS 18962) (4/6) 077 839 5849

**வேலையாட்கள் தேவை**

யாழ். நகரில் உள்ள வர்த்தக நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை

077- 1165 752

**வீடு வாடகைக்கு**

சூராவத்தை றோட், ரட்ணா பல்பொருள் வாணிபம் சுன்னாகம் கிழக்கு, ஊரிசாட்டி சிவபூதராஜர் கோயிலடி துரைபேக் ஹவுஸ் (பேக்கரியில் பெரிய அரச மர ஒழுங்கையில், இடது பக்க மூன்றாவது வீடு கிறிஸ்தவ கத்தோலிக்க சமய மாணவர்களுக்கு மட்டும் வாடகைக்குண்டு. (cs 43663) (2/6)

077 372 3916

**பெயர் மாற்றம்**

நறுவிலிக்குளம், வங்காலை மன்னாரில் வசிக்கும் என்றிக் ஜெயராஜ் மொத்தம் ஜெல்சின் ஆகியநான் எனது பெயரை என்றிக் ஜெயராஜ் மொத்தம் ஜெல்ஸ்ரின் என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் என்றிக் ஜெயராஜ் மொத்தம் ஜெல்ஸ்ரின் என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகிறேன். (cs 43662) (2/6)

என்றிக் ஜெயராஜ் மொத்தம் ஜெல்ஸ்ரின்


## தடம்புரண்டது...

தனியார் பேருந்து வட்டுவாகல் பாலத்துக்கு அருகில் தடம்புரண்டு நேற்று மாலை விபத்துக்குள்ளானது. அதில் பயணித்த ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், 4 பேர் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். 22 பேர் காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தை முந்திச் செல்ல முற்பட்டபோதே 40 பயணிகளுடன் சென்றுகொண்டிருந்த குறித்த தனியார் பேருந்து தடம் புரண்டதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் கூறுகின்றனர். விபத்தில் உயிரிழந்தவர் தொடர்பான விவரங்கள் நேற்று இரவு வரையில் வெளியாகவில்லை. (அ-ஒ-19)

## மற்றொரு...

மதியம் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் கம்பஹா மாவட்டம் கடவத்தைப் பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பதிவாகியுள்ளது. முச்சக்கரவண்டிச் சாரதியான அவர் நேற்றுக் காலையிலிருந்து நீண்ட நேரம் வரிசையில் காத்திருந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை- கண்டி மாவட்டத்திலும் இதே போன்று நேற்று முன்தினம் உயிரிழப்பு ஒன்று பதிவாகியமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

## மாஸ்க்...

முகக்கவச உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் விதுர அல்கம தெரிவித்தார். முகக்கவசங்களை தயாரிப்பதற்கான மூலப் பொருள்களை பெற்றுக்கொள்வதில் ஏற்பட்டுள்ள சிக்கல் காரணமாகவும், டொலர் பெறுமதி அதிகரிப்புக் காரணமாகவும் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார். (அ-ஒ-இ)


# 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.'

தோற்றம் 19 . 10 . 1956

மறைவு 20 . 02 . 2022



**அமரர் விஸ்வலிங்கம் சம்புநாதன்**

அன்புடன் அரவணைத்து அறிவுரைகள் பல சொல்லி பண்புடன் வாழ வழி சொல்லி வாழ வைத்த எங்கள் அப்பாவை இழந்து தவித்த வேளை பல இடர்களுக்கு மத்தியிலும் நேரடியாக வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் தொலைபேசி, வலைத்தளங்கள் பதாகைகள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இன்றைய தினம் (21.03.2022) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்
மலர் மகள் வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
(CS 43661) (3/6)

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



**திரு.கா.வி. குருநாதன்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

மண்ணில் 04.10.1942 விண்ணில் 07.03.2022

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (22.03.2022) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக் கிருத்தியம் அன்று முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெற உள்ளது. அத்தருணம் அன்பர்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும், தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் இன்றுவரை சகல உதவிகளையும் செய்த அனைவருக்கும் எமது நன்றியைத்தெரிவித்துக்கொள்கின்றோம்.

மனைவி
692, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
021 222 6711
சிவகுரு ஆதீனம்
021 222 0103


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்சக்களுக்கு உயிரூட்ட முடியாது

## சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்கோம் கஜேந்திரகுமார் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 21

ஒட்டுமொத்தமான மக்களின் வெறுப்பைச் சந்தித்து வீழ்ச்சி கண்டுள்ள ராஜபக்சக்களுக்கு உயிர்கொடுக்க முடியாது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்பது குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அண்மைய நாள்களில் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக அரசின் மீது அனைத்து இன மக்களும் வெறுப்பையே வெளிப்படுத்தியுள்ளனர். இத்தகையதொரு தருணத்தில் நாம் மாநாட்டில் பங்கேற்பதானது வீழ்ச்சி கண்டிருக்கும் ராஜபக்ச குடும்பத்துக்கு மீண்டும் புத்துயிர் அளிப்பதற்கு நிகரானதாக மாறிவிடும். இவ்விதமான பின்னணிகளைக் கொண்டவர்கள் கூட்டும் சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்பதில் தமிழ் மக்களுக்கு எவ்விதமான நன்மைகளும் கிடைக்கப்போதில்லை - என்றார்.

இதேவேளை- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூன்று பங்காளிக் கட்சிகளும் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

## 6 நாள்களாக காத்திருக்கிறது எண்ணெய்க் கப்பல்

### டொலர் விடுவிக்காமையே காரணம்

கொழும்பு, மார்ச் 21

நாட்டின் கடற்பரப்பில் கடந்த 6 நாள்களாக நங்கூரமிடப்பட்டுள்ள எண்ணெய்க் கப்பலுக்கு செலுத்த வேண்டிய 42 மில்லியன் அமெரிக்க டொலரை விநியோகிப்பதற்கு அரச மற்றும் தனியார் வங்கிகள் இணக்கம் தெரிவிக்கவில்லை என்று வலுசக்தி அமைச்சு அறிவித்துள்ளது.

கட்டணம் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால் எரிபொருள் தரையிறக்கல் மற்றும் எரிபொருள் விநியோகத்தில் பாதிப்பு ஏற்படும். நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு கிடையாது என பொதுமக்கள் நம்பிக்கை கொள்ள வேண்டுமாயின் நாட்டுக்கு ஒருநாளைக்கு மாத்திரம் 4 எண்ணெய்க் கப்பல்கள் வருகை தர வேண்டும் என பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எரிபொருள் விநியோகம் மோசமான நிலைமையை எதிர்கொண்டுள்ள சூழலில் 20 ஆயிரம் மெற்றிக்தொன் டீசல், 20 ஆயிரம் மெற்றிக்தொன் விமான எரிபொருள் அடங்கிய எண்ணெய்க் கப்பலுக்கு கொள்முதல் கட்டணமாக 42 மில்லியன் அமெரிக்க டொலரைச் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால் அந்தக்கப்பல் கடந்த 6 நாள்களாக நாட்டின் கடற்பரப்பில் நங்கூரமிடப்பட்டுள்ளது.

எரிபொருள் கொள்முதலுக்கு கட்டணம் செலுத்துவதில் தாமதம் ஏற்படும் பட்சத்தில் கப்பலுக்கு ஒரு நாளைக்கு மாத்திரம் 19ஆயிரம் டொலர் தாமதக் கட்டணம் மேலதிகமாகச் செலுத்தப்பட வேண்டும். நங்கூரமிடப்பட்டுள்ள கப்பலுக்கு செலுத்த வேண்டிய 42 மில்லியன் அமெரிக்க டொலரை தனியார் வங்கி ஊடாக பெற்றுக்கொள்ளுமாறு மத்திய வங்கி வலுசக்தி அமைச்சுக்கு அறிவித்ததைத் தொடர்ந்து வலுசக்தி அமைச்சுக்கும், தனியார் வங்கி பிரதானிகளுக்கும் இடையில் பேச்சு இடம்பெற்றது. ஆனால் அதில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

(அ-ஒ-இ)

## 6 கிலோ தங்கத்தை இந்தியாவுக்கு கடத்த முயன்றவர் கைது

கொழும்பு, மார்ச் 21

கடல் வழியாக இந்தியாவுக்கு கடத்தப்படவிருந்த 12 கோடி ரூபா பெறுமதியான 6 கிலோகிராம் தங்கத்துடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். வெள்ளம்பிட்டி பகுதியை சேர்ந்த 38 வயதான நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேகநபர் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஒ-இ)

### தண்ணீர்க்...

மாதமும் நிரம்பிய குழந்தை உயிரிழந்துள்ளது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், புதுக்குடியிருப்பு - கைவேலிப் பகுதியைச் சேர்ந்த சிரோன் முகேஸ்குமார் சியோன்ஷன் என்ற குழந்தையே உயிரிழந்துள்ளது. இரட்டைக் குழந்தைகளில் ஒரு குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த போதே குழந்தை, மலசலகூடத்துக்குள் வைக்கப்பட்டிருந்த தண்ணீர்க் 'கானுக்குள்' தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளது. முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் ரி.சரவணராஜா சம்பவ இடத்துக்கு நேரில் சென்று பார்வையிட்டு விசாரணைகளை முன்னெடுத்தார். (அ-ஒ-19)

### பேருந்து...

பிரதமர் மஹிந்த ராஜபக்ச மட்டுவில் வண்ணாத்திப்பாலத்துக்கு அருகில் பொருளாதார மத்திய நிலையத்தை நேற்றுக் காலை திறந்து வைக்க வருகை தந்தார். அவரது வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து காணாமல் ஆக்கப்படோரின் உறவுகளால் போராட்டம் முன்னெடுக்கப்படவிருந்தது. போராட்டத்தில் பங்கேற்பதற்காக முல்லைத்தீவிலிருந்து பேருந்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வருகை தந்தனர்.

அவர்களை மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயிலடியில் பொலிஸார் மடக்கினர். பேருந்திலிருந்து எவரையும் இறங்கவிடாது, பேருந்தின் இரண்டு வாசல் கதவுகளையும் மூடி பொலிஸார் முற்றுகையிட்டனர் . பேருந்தில் கைக் குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள் எனப் பலர் இருந்தனர். அரை மணி நேரத்துக்கும் அதிகமாக அவர்களைப் பொலிஸார் அடைத்து வைத்திருந்தனர். பேருந்தின் சாரதி பொலிஸாரால் கடுமையான விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டார்.



பொலிஸாரின் சிறைப்படுத்தல் முற்றுகையைத் தகர்த்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் பேருந்திலிருந்து வெளியே வந்தனர். இதன்போது ஆண் பொலிஸாரே அதிகளவில் அங்கு கடமையிலிருந்ததுடன், போராட்டத்துக்கு வந்திருந்த பெண்களின் தலைமுடியையும் பிடித்து இழுத்து தள்ளி விழுத்தினர். வீதியில் இறங்கி, பிரதமரின் திறப்பு விழா நிகழ்வு இடத்தை நோக்கிச் செல்ல முயன்ற மக்களை வீதியில் தடைகளை ஏற்படுத்தி பொலிஸார் மறித்தனர். சிறப்பு அதிரடிப்படையினரும் வரவழைக்கப்பட்டனர். நீண்ட நேரமாக பொலிஸார் மீதும், பிரதமர் மஹிந்த மீதும் மக்கள் வசை மாரி பொழிந்தனர்.

தமது காணாமல் ஆக்கப்பட்ட அன்புக்குரியவர்களின் படங்களைத் தாங்கியவாறு கதறியழுதனர். காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் இரத்த உறவுகளைத் தேடிய குழந்தைகளும் பொலிஸாரின் தடைக்கு எதிராக கதறியழுதார்கள். ஒரு கட்டத்தின் பின்னர் பொலிஸார் வீதிகளில் மறித்து நிற்க, வயல்வெளிகளுக்குள்ளால் திறப்பு விழா இடம்பெறும் இடத்தை நோக்கி போராட்டக்காரர்கள் முன்னேறினர். பொலிஸார் விரட்டிப் பிடித்து தடுக்க முயன்றாலும் போராட்டக்காரர்கள் முன்னேறிச் சென்றனர்.

நிகழ்விடத்துக்கு போராட்டக்காரர்கள் வந்தடைவதற்கு சில நிமிடங்கள் முன்பாக பிரதமர் மஹிந்த ராஜபக்ச அங்கிருந்து வெளியேறியிருந்தார். இதனையடுத்து திறக்கப்பட்ட பொருளாதார மத்திய நிலையத்துக்குள் புகுந்த போராட்டக்காரர்கள் அங்கு போராட்டம் நடத்தினர்.

**மருத்துவமனையில் சேர்ப்பு**

போராட்டத்தின் போது பொலிஸாரின் தாக்குதலுக்கு இலக்கான வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவிகள் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஒ-7-26-131)

### பிரதமர்...

கொடும்பாவியாக அதனை மாற்றி எரித்து தமது எதிர்ப்பை நேற்று வெளிப்படுத்தினர்.

மட்டுவில் பொருளாதார மத்திய நிலையத் திறப்பு விழாவுக்கு வருகை தந்த பிரதமர் மஹிந்த ராஜபக்சவை வரவேற்று, ஈ.பி.டி.பி.யினரால் பதாகை கட்டப்பட்டிருந்தது. திறப்பு விழா முடிவடைந்த பின்னரே, காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவுகளால், அந்த இடத்தை அடைய முடிந்தது.

அவர்கள் வாசலில் கட்டப்பட்டிருந்த பிரதமரின் வரவேற்பு பதாகைக்கு மண் அள்ளி தூவி சாபமிட்டனர். அதன் பின்னர் தடியால் அடித்தனர். இறுதியில் அதனை கிழித்து எடுத்து அருகிலிருந்த காய்ந்த புல்லுகளை அதன் மீது போட்டு கொடும்பாவியாக மாற்றி எரித்தனர்.

இதன்போது 'நாங்கள் தமிழீழத் தாய்களடா, உன்னை எமது தமிழீழ மண்ணில் கால் வைக்க விடமாட்டோம், கொலையாளியே'என்றுபல்வேறுமுழக்கங்களையும் அவர்கள் எழுப்பினர். (அ-ஒ-26)

### போராட்டங்களால்...

எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது என்று வழங்கப்பட்ட தகவலையடுத்து இந்த மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிரதமர் மஹிந்த நல்லூர் ஆலயத்துக்கு செல்லும் நிகழ்ச்சி நிரலுக்கு முன்னதாக ஆலயச் சூழலில் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் வீதிகளும் மூடப்பட்டிருந்தன.

ஆலயத்துக்குச் செல்லும் பிரதான வீதிகளான பருத்தித்துறை வீதி ,கோவில் வீதி என்பன பொலிஸாரினால் வழிமறிக்கப்பட்டு மாற்றுப்பாதை ஊடாக பொதுமக்கள் அனுப்பப்பட்டனர்.

இந்த நிலையில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்துக்குச் சென்று பிரதமர் வழிபாடு செய்தார். இதனையடுத்து நல்லூரிலிருந்து பாதுகாப்புகள் விலக்கிக் கொள்ளப்பட்டன. (அ-ஒ-26)

### மஹிந்தவுடன்...

இராமநாதன் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. பிரதமர் மஹிந்த ராஜபக்சவுடன் மிக நெருக்கமாக கூடிக்குலாவினார். இதேவேளை - அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கொரோனாத் தொற்றால் பிரதமருடனான நிகழ்வுகளில் பங்கேற்கவில்லை. ஆனால் ஈ.பி.டி.பி. ஆதரவாளர்கள், பிரதமர் பங்கேற்ற நிகழ்வில் கலந்துகொண்டு தமது கட்சிக் கொடிகளைத் தூக்கிப் பிடித்து அவருக்கு பெரும் ஆதரவு தெரிவித்தனர். (அ-ஒ-5)

### மஹிந்த...

டம் நடத்தியபோது பிரதமர் மீது வசைமாரி பொழிந்தனர். 'கொலையாளி, இனப்படு கொலையாளி, நாயே, பேயே ' என்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்சவை அவர்கள் திட்டித் தீர்த்தனர். ஆயுதம் ஏந்திய சிறப்பு அதிரடிப்படையினர் முன்பாகவே, காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் தாய்மார் இவ்வாறு வசைமாரி பொழிந்தனர்.

(அ-ஒ-26)

### மரக்கறிகள்...

சடுதியாக வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மரக்கறிகள் வாங்க வரும் வியாபாரிகள் வருகை தராததும், எரிபொருள் தட்டுப்பாடுமே மரக்கறிகளின் விலை வீழ்ச்சி மற்றும் விற்பனையின்மைக்கு முக்கிய காரணம் என்று விவசாயிகள் கூறுகின்றனர். (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூளாயில் இடம்பெற்ற விபத்தில் காரைநகரைச் சேர்ந்தவர் சாவு!



யாழ். மார்ச் 21

மூளாயில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றொருவர் காயமடைந்தார்.

நேற்று இரவு 9 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்தில் உயிரிழந்தவர் யாழ்ப்பாணம் நகர வர்த்தக நிலையத்தில் கணக்காளராக பணியாற்றும் காரைநகர் கருங்காலியை சேர்ந்த சங்கரப்பிள்ளை நித்தியானந்தராசா (வயது-49) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

யாழ். பல்கலைக்கழக மாணவனான மூளாயைச் சேர்ந்த ஆனந்தகுமார் கஜீபன் என்ற இளைஞரே காயமடைந்தார்.

மூளாய் மாவடி வீதியில், காளி கோயிலுக்கு சமீபமாக இவ்விபத்து இடம்பெற்றது. மேற்படி இருவரும் பயணித்த மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. இதில் உயிரிழந்தவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் அதிக குருதி வெளியேறியிருந்தது.

சம்பவ இடத்துக்கு விரைந்த வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். காயமடைந்தவர் யாழ்.போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். உயிரிழந்தவரின் சடலமும் யாழ். போதனா மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டது. (ஒ-இ)

## ஈஸ்டர் தாக்குதலை அறிந்தும் தடுக்க தவறினர் அதிகாரிகள்!

*உயர் நீதிமன்றில் எடுத்துரைப்பு*

கொழும்பு, மார்ச் 21

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக அறிந்திருந்தும், அன்றிருந்த ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பாதுகாப்புப் படையினர் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்று இலங்கை வழக்கறிஞர் சங்கத்தின் சார்பில் முன்னிலை யாகிய ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்தன உயர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

ஏழு நீதியரசர்கள் கொண்ட குழாமின்முன் முன்னிலையாகிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஈஸ்டர் ஞாயிறுத் தாக்குதல் குறித்த புலன் விசாரணைத் தகவல்கள் முன்கூட்டியே கிடைத்த வேளையிலும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர, பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் ஏனைய பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் பயங் கரவாதத் தாக்குதலைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளனர். பொதுமக்கள் அரசு மீது வைத்திருந்த நம்பிக்கையையும் இவர்கள் ஏமாற்றியுள்ளனர் என்று ஜனாதிபதி சட்டத்தரணி ஜயவர்தன மேலும் தெரிவித்தார்.

இவர்களின் உதாசீனத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு மனுவில் கோரப்பட்டுள்ளது. மனு மீதான மேலதிக விசாரணை எதிர்வரும் 29ஆம் திகதி இடம்பெறும். (ம-4,ரி1)

**உடன் வேலைவாய்ப்பு**

வவுனியாவில் இயங்கிவரும் பிரபல்யமான ஐஸ்கிறீம் விற்பனை நிலையத்தில் பணியாற்றுவதற்கு வேலையாட்கள் உடன் தேவை.

077 378 8746

**eDUS | Online Institute**

சிறந்த ஒன்லைன் கல்விக்கான நிரந்தர தீர்வு!

தரம் 1 தொடக்கம் A/L (English & Tamil Medium)

Professional courses for beginners

Admissions Open...!

www.edus.lk 077 712 3330

**துரித பொதிகள் சேவை**

உள்நாடு வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட சலுகை

India : 1500/=
Australia : 1850/=
France : 1400/=
Germany : 1250/=

மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. Road, யாழ்ப்பாணம்.
0777 554528 (CS)(4/6)

**STUDENT VISA – 2022**

1) Child education 5–17 years (both parent can go with the children)
2) Student Visa with the work,
a. Canada UK – IELTS (6 – 6.5) and Australia
b. Europe Countries (Germany, Swiss, Italy, France etc…) IELTS தேவையில்லை

Intake Sep 2022

Closing date 30.03.2022

Application now in process - Register now
Minimum qualifications – A/L

குறைந்த கட்டணத்தில் வேலையுடன் கூடிய கற்கை நெறியினை தொடர விரும்புபவர்கள் கீழ் உள்ள மின்னஞ்சல் முகவரிக்கு தங்களது சுயவிபரக்கோவையை அனுப்பவும்.

Visa Consultant:-
Adiyapatham Road, Thirunelvely, Jaffna. - T.P: 0770385584 - Email Id: naltcjaffna@gmail.com

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ். கைதடி தெற்கில் விக்னேஸ்வரா வித்தியாலயம் அருகாமையில் 09 பரப்புக் காணி 2 பரப்பாகவும், 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

- கைதடி சந்தியில் இருந்து 600m தூரத்தில்
- நல்ல சூழலில்
- கைதடி சந்தி (A 09 றோட்) பெற்றோல் நிரப்பு நிலையம் அருகாமை வீதியில்

தொடர்பு: 074 291 3725 / 074 291 3726

# மரண அறிவித்தல்



## திரு.கனகசுந்தரம் முத்துச்சாமி

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் 71/26A கருவப்புலம் ஒழுங்கை கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருவாளர் கனகசுந்தரம் முத்துச்சாமி அவர்கள் நேற்று (20.03.2022) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் தலவாக்கல, பலாங்கொடை, மஸ்கெலியா, தேயிலை கூட்டுத்தாபனத்தில் தலைமை உத்தியோகத்தராகவும் (Head Factory office - state plantation) யாழ். மஸ்கன் நிறுவனத்திலும் பணியாற்றினார். அன்னார் காலஞ்சென்ற கனகசுந்தரம், சிவகாமசுந்தரி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற செல்வராஜன் மற்றும் ஞானரஞ்சிதம் தம்பதியரின் அன்பு மருமகனும், சாந்தினியின் (ரஞ்சி) பாசமிகு கணவரும், Dr.மலரவன் (கண் வைத்திய நிபுணர்-போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்), மலரினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், துஷ்யந்தினி, சுந்தரகுமாரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கனிஷ்கா, சந்தீஸ் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான திரிபுரசுந்தரி, சிவஞானசுந்தரம், கமலசுந்தரி, அழகானந்தசுந்தரம், தெய்வசுந்தரி, அழகானந்தசுந்தரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வரஞ்சிதம், செல்வக்குமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2022) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 11.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோற்றம் 09.05.1941

மறைவு 20.03.2022

**தகவல்:- குடும்பத்தினர்**

(CS 18967) (4/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.